விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 209 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 31 திங்கட்கிழமை (15.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாளை முக்கிய அறிவிப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் 2024 தொடர்பான விசேட அறிவிப்பினை நாளை 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடவுள்ளது.

இந்த அறிவிப்பு அன்றைய தினம் முற்பகல் 10.30க்கு வெளியிடப்படவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

அரசியலமைப்புக்கு அமைய செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான தினத்தை அறி

15

## தேவார மடத்தை திறந்து வைத்தார் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி



(வட்டுக்கோட்டை)

சிவபூமி அறக்கட்டளையால் வட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்ட தேவாரமடம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீ.சிவஞானம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சிவபூமி அறக்

16

# பிரபாகரனின் நிலையே ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலாநிதி தயான் ஜயதிலக



(கொழும்பு)

கிளிநொச்சி வீழ்ச்சிக்குப் பின்னர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அடுத்த கட்டம் குறித்து சிந்திப்பதற்கு அவகாசமில்லாது ஏற்பட்டிருந்த நிலைமையே தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டுள்ளது என்று கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி

## டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு

### தேர்தல் பிரசாரத்தின்போது சம்பவம்



08

## போக்குவரத்து அத்தியாவசியம்

### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

போக்குவரத்து சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து மீண்டும்

15

## 10 பில்லியன் தேர்தலுக்கு ஒதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்

15

## அரசாங்கம் மக்களின் உரிமைகளை முடக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கிறது

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்கும் செயற்பாட்டினையே முன்னெடுத்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஸ்ரீ மகாபோதி விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர்

15

## 30 ஆயிரத்தை கடந்த டெங்கு தொற்றாளர்கள்

(கொழும்பு)

இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைக் கடந்துள்ள தாகத் தேசிய தொற்று

15

## ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதி விடுவிப்புத் தொடர்பில் ஆராய

### தேர்தல்கள் ஆணைக்குழு நிதியமைச்சின் அதிகாரிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதி விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக நிதியமைச்சின் அதிகாரிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவில் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதனிடையே

15

### ஜனாதிபதியும் அரசாங்கமும்

## தேர்தலுக்கு அஞ்சி அரசியலமைப்பு சதிகளை முன்னெடுக்கின்றது - சஜித்



(களுத்துறை)

தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் தேர்தல்களுக்கு அஞ்சி அரசியலமைப்புச் சதிகளை முன்னெடுத்து வந்தாலும் நாம் எந்த சவாலுக்கும் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் அரண் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே

16

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணைக் காணி 10 ஏக்கர் காணி 15 கால்நடைகள் குத்தகைக்கு விடுதல்

முல்லைத்தீவு மாவட்ட சிக்கனக்கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தான காணி 10 ஏக்கர் 9ம் வட்டாரம் மல்லிகைத்தீவு மு/புதுக்குடியிருப்பு நந்திக் கடல் கரை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அண்மையிலுள்ளது. அதில் மாரி காலத்தில் முழுமையாக வயல் செய்ய முடியும். பெரிய கட்டுக்கிணறு பெரிய கட்டிடம். இரு ஒட்டுடன் கூடிய சிறிய கட்டிடம் உள்ளது. அத்துடன் பெரிய நல்லின கால்நடைகள் மொத்தம் 15 உள்ளது. காணியை தனியாகவோ அல்லது கால்நடைகளுடனோ குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனைப் பெற்றுக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள் நேரில் வந்து பார்வையிட்டு அதன் பின்பு இணக்கப்பாட்டுடன் பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புக்கு :


**0243248603, 070 2126 396, 077 345 2720, 077 345 9178** உடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
சிகசு சங்கங்களின் சமாசம்,
வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.

(C-0797)


# மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 10 - 1941



மறைவு 14 - 07 - 2024

## வைரமுத்து தவரத்தினம்

(ஓய்வு நிலை உதவி முகாமையாளர் – மக்கள் வங்கி)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தவரத்தினம் அவர்கள் நேற்று (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் தனேஸ்வரியின் அன்புக் கணவரும் தர்சினி, வசந்தினி, தனரஞ்சன்(மக்கள் வங்கி உத்தியோகத்தர் - தெல்லிப்பளை), வரதன்(ஆசிரியர் - யா/வட்டு இந்துக் கல்லூரி), பிரதீபன்(பாதுகாப்பு உத்தியோகத்தர் - மக்கள் வங்கி), பவானந்தினி(Unit Manager - Janasakthi plc), தனரூபன்(ஆசிரியர் - யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயந்திமாலா (ஆசிரியர் - யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), சிவராஜினி (ஆசிரியர் - யா/பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோ.க.த.க பாடசாலை), சுபாஜினி(அலுவலக உத்தியோகத்தர் - யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), றபித்வஜன் (Janashakthi insurance plc - Regional Sales Manager, Jaffna capital region), பத்மாஜினி(அபிவிருத்தி உத்தியோகத்தர் - தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் துசிந்தா, பர்மிஷா, தர்சஜன், தக்சஜன், தரனீகரன், நிருஷிகன், நிதுர்ஷாஜினி, விருக்சயன், லினுக்சிகா, ஆருத்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.07.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 659 3396

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(162)

# ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தி சஜித் தலைமையிலான கூட்டணி

## ஓகஸ்ட் முதலாம் திகதி அறிவிக்கப்படுகின்றது

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் சக்தியை தலைமைத்துவமாகக் கொண்ட அரசியல் கூட்டணி எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. கொழும்பில் பெரும் மாநாட்டை நடத்தி இந்த அறிவிப்பு விடுக்கப்படவுள்ளதுடன், அதற்கான ஏற்பாடுகள் அனைத்து மட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவமாக கொண்டு பரந்துபட்ட அரசியல் கூட்டணிக்கான பேச்சுவார்த்தைகள் முடிவுற்றுள்ளது.

உத்தேச ஜனாதிபதி தேர்தலின் வெற்றியை இலக்காக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த கூட்டணி குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு ஓகஸ்ட் மாதத்தில் வெளிப்படுத்தப்படவுள்ளது.

தமிழ் மற்றும் முஸ்லிம் உள்ளிட்ட பல கட்சிகள் உள்ளடங்கலாக இந்த எதிர்க்கட்சியின் கூட்டணி அமையப்பெற்றுள்ளது.

எந்தெந்த கட்சி மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் இணைந்துள்ளார்கள் என்பதை தற்போது கூற இயலாது என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, உரிய திகதி நெருங்குகையில் அரசியல் கூட்டணி குறித்த முழுமையான தகவல்கள் வெளிப்படுத்தப்படும் என்று கூறினார். (ம-7)

# 1,10 000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி

## 17 ஆம் திகதி ஏல விற்பனை

(கொழும்பு)

1,10 000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 17ஆம் திகதி ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 50,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ம-7)


## வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E(O/L) க.பொ.த(சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2024

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 07.08.2024 (புதன்) | ஊர்காவற்துறை பிரதேச செயலகம் | மு.ப 8.30 பி.ப 2.00 |
| 08.08.2024 (வியாழன்) | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | மு.ப 8.30 பி.ப2.00 |
| 09.08.2024 (வெள்ளி) | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00 பி.ப2.00 |
| 10.08.2024 (சனி) | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00 பி.ப 2.00 |
| 11.08.2024 (ஞாயிறு) | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00 பி.ப 2.00 |
| 12.08.2024 (திங்கள்) | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் (தெற்கு வலயம்) | மு.ப 8.00 பி.ப 2.00 |
| 13.08.2024 (செவ்வாய்) | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் (வடக்கு வலயம்) | மு.ப 8.00 பி.ப 2.00 |
| 14.08.2024 (புதன்) | ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபம் | மு.ப 8.00 பி.ப 2.00 |
| 15.08.2024 (வியாழன்) | மன்னார் நகர சபை மண்டபம் | மு.ப 8.00 பி.ப 2.00 |
| 16.08.2024 (வெள்ளி) | வவுனியா நகர சபை மண்டபம் | மு.ப 8.00 பி.ப 2.00 |

Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

G.C.E (O/L) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

"அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்"

குறிப்பு:
மாணவர்கள் சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.

செயலமர்வின் அமைப்பாளர்கள்

1) தலைவர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் -இலங்கை
திரு.வே.தேவசேனாதிபதி (சிரேஷ்ட சட்டத்தரணி) LLB 077 1133 400
2) பொதுச்செயலாளர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் - இலங்கை
திரு.கந்தசாமி சக்திதரன் 077 070 3360
3) திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்) 077 3144 527
(4) திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்)
தேசிய லொத்தர் சபை 077 3850 841

இணை அனுசரணை கல்விக் காருணியன்

**ESP நாகரட்ணம் (கஜமுகன் ஹாட்வெயர்)**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2833

(C-794)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ மயமாக்கலை நியாயப்படுத்தவே 'யுக்திய'

## சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக இராணுவ மயமாக்கலை சட்டபூர்வமாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், "யுக்திய" நடவடிக்கையும் இராணுவமயமாக்கலை நியாயப்படுத்துவதற்கான ஒரு திட்டமாகவே அமைந்திருப்பதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

திட்டமிடப்பட்ட இராணுவ மயமாக்கல், "யுக்திய" நடவடிக்கையின் கீழ் இடம்பெறும் சட்டவிரோத கைதுகள் போன்றவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து கருத்து வெளியிட்டுவரும் அம்பிகா சற்குணநாதன், இவ்விடயம் தொடர்பில் மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கையில், குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக சட்டம் மற்றும் கொள்கை உருவாக்கத்தில் இராணுவமயமாக்கலை சட்டபூர்வமாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. புனர்வாழ்வளித்தல் பணியக சட்டம், ஸ்ரீலங்கா டெலிகொம் திருத்தச் சட்டமூலம், குடியகல்வு சட்டமூலம் போன்றவற்றை அதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

அதேபோன்று போதைப் பொருளுக்கு எதிரான "யுக்திய" நடவடிக்கையும் இராணுவ மயமாக்கலுக்கு வாய்ப்பளிப்பதற்கும் அதனை நியாயப்படுத்துவதற்குமான ஒரு திட்டமாகவே அமைந்திருக்கிறது.

அதேவேளை போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டோர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மீண்டுமொரு தடவை விமர்சித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி, பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாதாள உலகக் குழுவினர் கொல்லப்பட வேண்டும் எனவும், அதனைச் செய்யும் பொலிஸாருக்கு நாமனைவரும் ஒன்றிணைந்து ஆதரவளிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதன் மூலம் பொலிஸார் சட்டவிரோத படுகொலைகளில் ஈடுபடுகின்றனர் என்பதை அமைச்சர் ஏற்றுக்கொண்டிருப்பதுடன், அது தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களின் பிரகாரம் மிகப் பாரிய குற்றமாகும்.

ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் பொலிஸார் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதுடன், சட்டம் மீறப்படுவதற்கும் இடமளிக்கின்றனர்.

அரசாங்கம் தமது நடவடிக்கைகள் பாதுகாப்பானதும் அமைதியானதுமான இலங்கையை கட்டியெழுப்ப உதவும் எனக் கூறுகின்றது. ஆனால் அதற்கு முற்றிலும் எதிர்மாறான விடயங்களே நடைபெறுகின்றன. கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து பொலிஸாருடனான துப்பாக்கிச்சூட்டில் 5 பேரும் அடையாளம் தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டில் 19 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவை "யுக்திய" நடவடிக்கை மற்றும் அதன்போது பின்பற்றப்படும் உத்திகளின் பின்னணியிலுள்ள உண்மையான நோக்கம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது அமைச்சர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பொறுப்புக்கூறலுடன் செயற்படுவதற்குப் பதிலாக, அவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கிறார். அதேபோன்று அமைச்சர்கள் வன்முறை செயற்பாடுகளுக்கு பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பொய்யான தகவல்களைப் பரப்புகின்றனர்.

இருப்பினும் அது சட்டவாட்சியையும், உரிமைகளின் பாதுகாப்பையும் முற்றிலும் சீர்குலைப்பதாகவே அமையும் என எச்சரித்துள்ளார். (நி)

## சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் ஊடாக அஸ்வெசும கடன் திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் ஊடாக அஸ்வெசும கடன் திட்டமொன்று இந்த மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார்.

இதன்கீழ் தொழில் முயற்சி, விவசாயம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றுக்காக விசேட முறைமையின் கீழ் கடன்கள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நலன்புரித் திட்டங்கள் ஊடாக மாத்திரம் நாட்டை வளப்படுத்த முடியாது.

சிறந்த உற்பத்திகள் மூலமாகவே நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியும்.

இது தொடர்பான நம்பிக்கையை மக்களுக்கு வழங்குவதற்காகவே இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார். (நி)

## இந்திய உயர்மட்டக் குழு அடுத்த மாதம் இலங்கைக்கு

(கொழும்பு)

இந்தியாவின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கைக்கு அடுத்த மாதம் விஜயம் செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் உட்கட்டுமான மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் நிலை குறித்து கண்டறிவதற்காக இந்த விஜயம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கையுடன் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்ள இந்த விஜயம் உதவும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பிரதிநிதிகள் இலங் கையின் முக்கியஸ்தர்களுடன் பல்வேறு பேச்சுவார்த்தை களை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## யாழிலிருந்து சென்ற கார் கோர விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்



(திருமலை)

அநுராதபுரம் - திருகோணமலை வீதியில் அநுராதபுரத்திலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த சொகுசு காரொன்று ஹொரோவ்பதான யாங்கோயா பாலத்தின் பாதுகாப்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த நால்வரும் ஹொரோவ்பதான பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காரின் சாரதிக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டதன் காரணமாக இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த விபத்தில் காயமடைந்த பெண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குழுவினர் திருகோணமலைக்கு தனிப்பட்ட தேவைக்காகச் சென்ற போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

## இஸ்ரேலில் பணியாற்றும் இலங்கையர் ஒருவர் காயம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் பணியாற்றி வரும் இலங்கையர் ஒருவர், ஏவுகணை எதிர்ப்பு அமைப்பினால் தாக்கி அழிக்கப்பட்ட ஏவுகணையின் ஒரு பகுதி தாக்கியதில் காயமடைந்துள்ளார்.

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார இதனை உறுதிப்படுத்தினார்.

காயமடைந்தவர் வடக்கு இஸ்ரேலின் லெபனான் எல்லைக்கு அருகில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த இலங்கையர் எனத் தெரியவந்துள்ளது.

ஏவுணையின் இரும்புத் துண்டு ஒன்று தலையில் தாக்கியதில் குறித்த நபர் காயமடைந்ததாகவும் அவர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும் இஸ்ரேலுக் கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# கபடியில் வெற்றியீட்டிய பாலிநகர் மகாவித்தியாலயம்



முல்லைத்தீவு துணுக்காய் வலயத்தின் பாலிநகர் மகா வித்தியாலய கபடி அணி வீரர்கள் வெற்றிகளைப் பதிவு செய்து மாகாணப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்போட்டிகள் யோகபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

20 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் அணிகள் முதலாமிடத்தையும் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் முதலாம் இடத்தையும், பெண்கள் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (நி-350)

## ஊரெழு கணேச வித்தியாலயம் மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு



யாழ். ஊரெழு கணேச வித்தியாசாலையில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவி செல்வி குகசீலன் திசானா யாழ்.வலயமட்ட விளையாட்டுப் போட்டியில், குண்டு எறிதலில் 14 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில் 2ஆம் இடத்தைப் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (நி-6)

## 3000 மீற்றர் ஓட்டம்

## தங்கப்பதக்கத்தை தட்டிச்சென்ற முத்துஐயன்கட்டு மாணவன்



தேசிய மட்ட 3000 மீற்றர் ஓட்டத்தில் முத்துஐயன்கட்டு இடதுகரை மாணவன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கனிஷ்ட பிரிவினருக்கான தடகளப் போட்டிகள் கொழும்பு தியகம விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டத்தில் முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஜெயகாந்தன் விதுசன் 9 நிமிடத்தில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார். (நி-90)

## இலங்கைக்கு வருகை தரும் இந்திய கிரிக்கெட் அணி



இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக இந்திய அணி எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இந்தத் தொடர்களில் முதலாவதாக இடம்பெறவுள்ள இருபதுக்கு 20 ஓவர் போட்டிகள் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஜூலை 26, 27 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதேவேளை இரு நாடுகளுக்கும் இடையிலான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1, 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மீண்டும் தலைவரானார் ஹர்த்திக் பாண்டியா




இலங்கை அணிக்கு எதிரான இருபதுக்கு 20 தொடரின் இந்திய அணித் தலைவராக ஹர்த்திக் பாண்டியா செயற்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் நிறைவடைந்த இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடருடன் இந்திய அணியை வழிநடத்திய ரோஹித் சர்மா, ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் 28ஆம் திகதி இலங்கை அணியுடன் இடம்பெறவுள்ள மூன்று போட்டிகளைக் கொண்ட இருபதுக்கு 20 தொடருக்கு புதிய தலைவராக ஹர்த்திக் பாண்டியா தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி வைத்தியசாலையின் மின்பிறப்பாக்கி இயக்கப்பட்டது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதிக்கென பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் தற்காலிக ஏற்பாடாக வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கி நேற்று ஞாயிறுக்கிழமை காலை உத்தியோகபூர்வமாக இயக்கப்பட்டது.

சாவகச்சேரியில் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 5மணி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்பட்ட நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனால் தற்காலிக ஏற்பாடாக வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கி இயக்கப்பட்டது.

வைத்தியசாலையின் புதிய கட்டட பிரிவுக்கு வெளிநோயாளர் பிரிவு மற்றும் மகப்பேற்றுப் பிரிவு ஆகியவற்றை மாற்றிய போதிலும் மின் தடைப்படும் வேளையில் அதற்கான மாற்று ஏற்பாடுகள் எவையும் இல்லாத நிலைமையில் வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா அவ்விடயத்தை வெளிப்படுத்திய நிலையில் தற்காலிக மின்பிறப்பாக்கி வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக தற்போதைய வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் கருத்து தெரிவிக்கையில்,

மின் தடைப்படும் வேளையில் மின்பிறப்பாக்கி இல்லாவிட்டால் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மகப்பேற்று விடுதிக்கான மின்தூக்கி ஆகியவற்றை இயக்க வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும் எனத் தெரிவித்திருந்தார். (நி-30)

## செயற்குழு கூட்டமும் கௌரவிப்பும்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் புதிய தெரிவுக் குழுவின் முதலாவது செயற்குழு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. முடிவில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் அல்ஹாஜ் என்.எம். அமீன் அவர்களை கௌரவித்து கலாபூஷணம் யாழ் பரீட் இக்பால் பொன்னாடை அணிவிப்பதை படத்தில் காணலாம்.

(சி-793)

# அதிகரிக்கும் நிதி மோசடிகள் மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களின் பேரில் நிதி மோசடி முயற்சிகள் அதிகரிப்பது குறித்து மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் சிரேஷ்ட பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் இவ்வகையான மோசடிகள் அரசாங்க நிறுவனங்களின் முத்திரையைக் கொண்ட மின்னஞ்சல்கள் மூலம் இடம்பெறுவதாகவும் பெறுநர்களை கட்டாயமாக பணம் செலுத்தும்படி இவை அறிவுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் சமீப காலமாக இந்த மோசடி நடவடிக்கைகள் குறித்த புகார்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அந்தவகையில் கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் சமூக வலைத்தளங்கள் தொடர்பான 7,900 புகார்களும் நிதி மோசடி தொடர்பான 1,830 புகார்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

(சி)



## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

### கூட்டுறவு தொழில் வங்கி (Coop Job Bank)

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு அமைப்புக்களில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு தொழில் வங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்புகளில் பொதுமுகாமையாளர் பதவி தொடக்கம் பல்வேறு முகாமைப் பதவிகளுக்கும் ஏனைய மேற்பார்வை செயற்பாட்டுமட்ட பதவிகளுக்கும் இத் தொழில் வங்கியூடாக எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

**சம்பள விபரம்:**

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைச் சம்பளம், சம்பள அதிகரிப்புக்கள், விசேட படி, வாழ்க்கைச் செலவுப்படி (7800.00) மற்றும் ஊக்குவிப்புப் படிகள் உட்பட பெற்றுக்கொள்ள முடியும்.

**ஏனைய வரப்பிரசாதங்கள்:**

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, பணிக்கொடை, கூட்டுறவு ஊழியர் நலநோன்பு நிதி, வாழ்க்கைத் தள்ளுபடி ஆகிய கொடுப்பனவுகளும், சட்டரீதியான லீவுகளும் உரித்துடையதாகும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

உரிய விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**

செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி 2ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-292)

**செயலாளர்,**
**யா.மா.கூ.சபை.**


# இராசிபலன்

15.07.2024
ஆனி 31, திங்கட்கிழமை
நவமி பிற்பகல் 5.21 மணிவரை

சுவாதி முன்னிரவு 11.12 மணிவரை
சுபநேரம் 12.00-1.30 மணிவரை
இராகுகாலம் 7.30-9.00 மணிவரை

சந்திராஷ்டமம் - சதயம், பூரட்டாதி

**வளவன்**

**மேஷம்** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல் நலன் சீராகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம்.

**ரிஷபம்** உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொல்லை கொடுத்த பலரே தோள் கொடுத்து உதவ முன்வரலாம்.

**சிம்மம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவு பகை பாராது உதவும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

**கன்னி** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தித் திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** வருமானம் திருப்திகரமாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


**கும்பம்** நேற்றைய பணியொன்றை இன்றும் தொடரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், உடல் நலன் சீராகும்.

**மீனம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், காரிய வெற்றிக்கு கடவுளை வணங்க வேண்டிய நாள், தொழில் ரீதியான பயண ங்களில் கூடுதல் கவனம் தேவை.

**மனதை அடக்கி வைப்பது தான் மனிதனுக்கு கஷ்டமான காரியம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாடு சிவமடத்தின் ஏற்பாட்டில் சைவ அறங்காவல் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்னாடு - செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சைவ அறங்காவல் என்ற பொருளில் அமைந்த முழு நாள் கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நட்சத்திர விடுதியில் நடைபெற்றது.

தென்னாடு அமைப்பின் நிறுவுனர் பொறியாளர் குணரத்தினம் பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு தென்னாடு பத்திரிகை ஆசிரியர் செந்தமிழாதன் தலைமை தாங்கினார்.

தருமபுரம் ஆதீனத்தின் திருக்கேதீச்சரக் கிளைமட கட்டளை தம்பிரான் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஆகியோர் நிகழ்வில் முன்னிலை வகித்தனர். (நி-33)

# இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமம் அங்குரார்ப்பணம்




(வவுனியா)

வவுனியா - பாவற்குளம் பகுதியில் இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமம் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தானால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாவற்குளம் படிவம் இரண்டில் நேற்று இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் தொழில் முனைவோருக்கான விவசாய உபகரணங்கள், கால்நடை வளர்ப்புக்கான பொருட்கள் மற்றும் கோழிக்குஞ்சுகள் என்பன வழங்கி வைக்கப்பட்டதோடு மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, செட்டிகுளம் பிரதேச செயலாளர் சுலோஜனா, கிராம சேவையாளர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.(நி-250)

# புலமைப் பரிசில் திட்டம் கிளிநொச்சியில் வழங்கி வைப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி வடக்கு மற்றும் தெற்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த 634 மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகான ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ், ஜனாதிபதி செயலகத்தின் செயலாளர் சமன் பந்துலசேன, கிளிநொச்சி மாவட்டபதில் அரச அதிபர் எஸ். முரளிதரன், அமைச்சின் செயலாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-315-316)

# அரசாங்கம் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரிப்பு

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

நான்கு மாதங்களுக்கு முன்னர் இருந்ததை விட அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் ஆய்வினூடாக தகவல் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, பொருளாதாரம் மற்றும் நாட்டின் பொருளாதாரப் போக்கு தொடர்பான விடயத்தில் அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையை உணர்வதாகவும் இந்த ஆய்வினூடாக குறிப்பிடப்படுகிறது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 250-300 | 240 |
| உருளைக்கிழங்கு | 340 | 360 | 250 | 300 | 360 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 350 | 400-500 | 450 |
| தக்காளி | 350 | 300 | 300 | 250 | 360 |
| மரவள்ளிக்கிழங்கு | 380 | 120 | 150 | 100-130 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 350 | 350 |
| கரட் | 350 | 450 | 480 | 400 | 450 |
| பூசணி | 180 | 200 | 200 | 150 | 240 |
| புடோல் | 160 | 250 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 260 | 200 | 160-200 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 260 | 400 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 250 | 240 | 200 |
| பாகற்காய் | 1200 | 700 | 1000 | 800 | 800 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 260 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 450 | 300 | 250-320 | 350 |
| லீக்ஸ் | 550 | 400 | 500 | 400 | 500 |
| பீற்றூட் | 400 | 450 | 550 | 450 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 700 | 500 | 900 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1000 | 500-650 | 900 |
| போஞ்சி | 800 | 650 | 600 | 400 | 700 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 60 | 80 |
| தேசிக்காய் | 800 | 700 | 1000 | 450-500 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 70 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 350 | 450 | -- | 450 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 140 | 100 | 150 | 150 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 120 | 80 | 100 | 100 | 80 |


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 21 1/2 6 இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Computer Studies, InformationTechnology, Album Designing, Plastic Bottle Assemble (Pvt)
எதிர்பார்ப்பு: கொழும்பில் வசிப்பவர் விரும்பத்தக்கது, உத்தியோகம்
தொ.இ: B/14653

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம் 2இல் செவ்
கி.பா: 24
உயரம்: 5'10"
தகைமை/ தொழில்: Aenospace Engineering, Associate Degree,Finance Analayaist
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14654

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Diploma in QS, Contractor
எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கும் பெண்
தொ.இ: B/14655

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 24 1 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc in Bio Medical Science
எதிர்பார்ப்பு: Engineer,UK resident
தொ.இ: G/14688


பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2இல் செவ்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Bsc(Hons) in Civil Engineering
எதிர்பார்ப்பு: Engineer,Lecturer, உத்தியோகம்
தொ.இ: G/14689

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்: 5'5"
கி.பா: 10
தகைமை/தொழில்: Msc Business and Management
எதிர்பார்ப்பு: லண்டனில் PR உள்ள மணமகன்
தொ.இ: G/14690

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள்
## தேகாந்த நிலையில் மெய்ப்பொருள் கண்ட உத்தமர்



## 27.05.1925-15.07.2023

### மறைந்தார் மாண்பு

பல புராண. இதிகாசங்களோடு தொடர்புபட்ட புராதனமான கீரிமலை நகுலேஸ்வர ஆலயமானது பரராஜசிங்கன் என்னும் அரசனின் ஆட்சிக்காலம் வரை மூன்று பிரகாரங்களுடன் ஐந்து கோபுரங்களும் உடைய பெரிய ஆலயமாக காணப்பட்டது. கி.பி 1621 இல் யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கேயர் நகுலேஸ்வரம் ஆலயத் தையும் இடித் தழித்தனர். போர்த்துக்கேயரால் அழிக் கப்பட்ட இவ்வாலயம் உட்பட பல புராதன ஆலயங்களை புனருத்தாரணஞ் செய்வதற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தீவிரப்பிரசாரம் செய்தார்.

அப்பிரசாரத்தால் தூண்டப்பட்ட மாவிட் டபுரம் கந்தஸ்வாமி கோயில் பரம்பரை தர்மகர்த்தாக்களுள் ஒருவராகிய பாரத்வாஜ கோத்ரத்தை சேர்ந்த கு.கார்த்திகேயக் குருக்களும் அவரது இரு புத்திரர்களான சபாபதிக்குருக்கள் மற்றும் தியாகராஜக் குருக்களும் 1878 ஆம் ஆண்டு முதல் கீரிமலையில் மாதர் காடு எனும் தமது சொந்த ஆதனத்தின் ஒரு பகுதியில் குறித்த நகுலேஸ்வர ஆலயத்தை மீள அமைக்கும் பணிகளை ஆரம்பித்து 1895 ஆம் ஆண்டு மன்மத ஆண்டு ஆனி மாதம் மஹாகும்பாபிஷேகம் செய்து நித்திய. நைமித்தியங்களை ஒழுங்காக நடாத்தி வந்தனர். அத்தோடு ஆலயத்தை சூழ நகுலேஸ்வரசுவாமி தண்ணீர்ப்பந்தல் (சிறாப்பர் மடம்). நகுலேஸ்வரசுவாமி ஆடிஅமாவாசை சிவபூசை மடாலயம் (கிருஸ்ணப்பிள்ளை மடம்). வைத்தி லிங்கம் மடம் போன்ற தாகசாந்தி நிலை யங்கள் உருவாகுவதற்கும் அனைவரும் சிவதர்மகாரியங்களை செய்யவும் வழி வகுத்தனர்.

கார்த்திகேயக்குருக்களின் மறைவிற்கு பின்னர் அவரது இரு புத்திரர்களான சபா பதிக்குருக்கள் மற்றும் தியாகராஜக் குருக் களும் ஆலயத்தை நிர்வகித்து வந்ததோடு தமக்குப் பின்னர் ஆலயத்தின் நித்திய. நைமித்தியங்கள் முதலிய சகல உரித்துக் களையும் தியாகராஜக்குருக்களின் பிள்ளை களான குமாரசாமிக்குருக்கள். கார்த்தி கேயக்குருக்கள். நடராஜக்குருக்கள் மற்றும் சபாரட்ணக்குருக்கள் ஆகியோருக்கும் அவர்களின் பின்னர் பரம்பரைபரம்பரை யாக அவர்களது ஆண் சந்ததியினருக்கு மாத்திரம் சேரும்படியும் ஆலயத்தின் முகாமைத்துவத்தை பரம்பரை பரம்பரை யாக மூத்த ஆண்சந்ததிக்கும் வழங்கி சைவாச்சாரத்திற்கமைவாகவும். வேத சிவாகமப்படியும். ஆலய நித்திய நைமித தியங்களின் ஒழுங்குமுறைகளை உள் ளடக்கி என்றென்றும் வலிதாக இருக்கக் கூடியவாறு 1898 ஆம் ஆண்டு சாசனம் ஒன்றை நிறைவேற்றினார்கள்.

சபாபதிக்குருக்கள். தியாகராஜக்குருக் கள் மறைவிற்கு பின்னர் தியாகராஜக் குருக்கள் அம்மணியம்மாள் தம்பதியி னரின் சிரேஷ்ட புத்திரன் குமாரசாமிக் குருக்கள் ஆலய முகாமைத்துவத்தை பொறுப்பேற்றதோடு குமாரசாமிக்குருக்கள். கார்த்திகேயக்குருக்கள். நடராஜக்குருக்கள் மற்றும் சபாரட்ணக்குருக்கள் நால்வரும் ஆலயத்தின் நித்திய நைமித்தியங்களை வேத சிவாகமப்படியும். சைவாச்சாரத்திற் கமைவாகவும் குறித்த சாசனப்படி செய்து வந்தனர்.

குமாரசாமிக்குருக்களுக்கும் மாவை ஆதீனகர்த்தாவாக விளங்கிய சுப்ரமண்ய குருக்கள் வேணுகுஷாம்பாள் தம்பதி யினரின் கனிஷ்ட புத்திரி அன்னம் மாளுக்கும் 27.05.1925 அன்று வைகாசித் திங்கள் புஷ்ய நட்சத்திரத்தில் மாவிட்ட புரத்தில் தாயாரின் இல்லத்தில் நகு லேஸ்வரக்குருக்கள் அவர்கள் சுபஜனனம் பெற்றார்.

பேரனாகிய இரத்தினக்குருக்களின் அரவணைப்பில் மழலைப் பருவத்தை கழித்தவர். ஜாதகர்மம். நாமகரணம். அன்னப்பிராசனம். சூடாகர்மம். வித் யாரம்பம் முதலிய பால்யத்தில் செய்ய வேண்டிய சம்ஸ்காரங்களை மாவிட்ட புரத்திலேயே பெற்றுள்ளார்.

ஆரம்பக் கல்வியை பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் பண்டிதர் கதிரிப்பிள்ளை ஆசிரியரின் கவனிப்பிலும். பின் காங்கேசன்துறை நடேஸ்வர ஆங்கில வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியர் சந்திரசூடாமணி ஐயரிடம் ஆங்கிலக் கல்வியையும் பெற்றார்.

அத்துடன் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு. தந்தையாரின் விருப்பப்படி அப்போது நகுலேஸ்வரர் ஆலயத் தின் மேற்குப்புறத்தில் தந்தையார் குமார சாமிக் குருக்களினால் நடத்தப்பட்ட நகு லாம்பிகா வேதாகம பாடசாலையில் தமது தந்தையாரிடமும். மாதகல் பிரம்மஸ்ரீ ஏரம்ப ஐயரிடமும். கணேச ஐயரிடமும் சமஸ்கிருத கல்வியைத் தொடர்ந்தார். வேதம். ஆகமம். அமரம். காப்பியம். தர்மசாஸ்திரம் முத லியவற்றை நிரம்பக் கிரகித்துக் கொண் டார். தந்தையாருக்கு உறுதுணையாக கோவில் கிரியைகளில் ஈடுபட்டு உதவி யாளராக பல கிரியைகளில் அனுபவ வாய்ப் பையும் பெற்றார்.

1946 ஆம் ஆண்டு வைகாசி மாதம் மாவை ஆதீனத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ சா.குமாரஸ்சுவாமிக் குருக்கள் (செல்லக் குருக்கள்) அவர்கள் தீக்ஷா குருவாக இருந்து இவருக்கு சிவாச்சார்யாபிஷேகம் செய்து வைத்தார். ஈசான சிவாச்சார்யார் என்னும் தீக்ஷா நாமம் பெற்று நகுலேஸ்வர ஆலய




நித்ய. நைமித்திய கிரியைகளை தனது தந்தை மற்றும் சிறிய தந்தைமாருடன் செய்துவந்தார்.

1947 ஆம் ஆண்டு மார்கழி மாதம் குமாரசாமிக்குருக்கள் மறைவிற்கு பின்னர். தனது 22 ஆவது வயதில் சட்டப்படியும். குலாசாரப்படியும். நகுலேஸ்வர ஆலயத்தின் முகாமைத்துவ நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அன்று முதல் சிறிய தந்தை மாரும் ஆலயத்தின் மற்றைய உரித்தாளர் களுமாகிய கார்த்திகேயக்குருக்கள். நடராஜக்குருக்கள் மற்றும் சபாரட்ணக் குருக்கள் ஆகியோரினதும் அவர்களின் பின் அவர்களது ஆண் சந்ததியினரதும் ஆதர வோடு தனது கடமைகளிலும் ஆலயத்தின் வளர்ச்சியிலும் தமது சிந்தனையைத் தூண் டிக் கருமமாற்றிவந்தார்.

நகுலேஸ்வரக்குருக்கள் அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஆவணி மாதம் மாவை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சு. துரைச்சாமிக்குருக்கள் நாராயணிஅம்மாள் தம்பதியினரின் புத்திரி வேதநாயகி அம்மாவை விவாகம் செய்து தமது வாரிசாக மூன்று ஆண் மக்களையும். ஐந்து பெண் பிள்ளைகளையும் பெற் றெடுத்தார். பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் தகுந்த வதூவரன்களை விவாகம் செய்து வைத்து பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகளையும் கண்டுகளித்தார்.

துரதிக்ஷ்டவசமாக 1918 ஆம் ஆண் டளவில் ஆலயம் தீ அனர்த்தத்திற் குள்ளாகியது இதனால் ஆலயத்தில் வழக் கமாக நடைபெற்று வந்த மஹோற்சவம் தடைப்பட்டது. அதன் பின்னர் பல தசாப்தங் களின் ஆலயம் நகுலேஸ்வரக்குருக்களின் அயராத முயற்சியால் மற்றைய உரித்தாளர் களின் பேராதரவோடு சிறிதளவு புனருத் தாரணம் செய்யப்பட்டு பின்னர் மீண்டும் 1953 ஆம் ஆண்டு சேலம் சிவஸ்ரீ. சிவ சுப்ரமண்யக்குருக்கள் தலைமையில் கும் பாபிஷேகம் நடத்தப்பட்டது.

1954 ஆம் ஆண்டு மீண்டும் புதிய கொடிஸ்தம்பம் ஸ்தாபனம் செய்யப்பட்டு நகுலேஸ்வரப்பெருமானுக்கு மகோற்சவமும் 1961 ஆம் ஆண்டு நகுலாம்பிகை அம்பாளுக்கும் புதிய கொடிஸ்தம்பம் ஸ்தாபனம் செய்யப்பட்டு மகோற்சவம் நடைபெற திருவருள் பாலித்தது.

நகுலேஸ்வரக்குருக்கள் புதுமையாக 1958 ஆம் [illegible] வேதிகை அமைத்து சுடர்விடும் தீபங்களை வைத்து ஒவ்வொரு சுடரின் கீழ் சங்குகள் ஸ்தாபித்து. பூஜித்து சகஸ்ர ஜ்யோதிர் மண்டல சங்காபிஷேகத்தை செய்தார்.

அதன் பின்னர் 1973 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தையும் குருக்களவர் கள் தானே ஆதீன முதல்வராகவும். பிரதான சிவாச்சாரியராகவும் சமகாலத்தில் கடமை புரிந்ததோடு உற்சவங்களை நிறைவேற்றிய பெருமையும் இவரைச்சாரும்.இவற்றைவிட பிரதோஷ விரத விழா. நவராத்திரி பூசை. திருவெம்பாவை பூசை. சோமவார விழா. யமசங்காரம். நடேசர் அபிஷேகம். பங்குனித் திங்கள். பங்குனி உத்திர சோமஸ்கந்தருற் ஷவம். ஆடிச்செவ்வாய். வரலஷ்மி விரதம். கேதாரகௌரி நோன்பு என்னும் அரும் பெரும் வைபவங்களை சிறப்பாக ஏற்பாடு செய்து மக்களை சிவதர்சனத்தில் ஆற்றுப் படுத்தியமை நகுலேஸ்வரக்குருக்கள் செய்த பெரும் சிவதொண்டாகும்.அத்தோடு தேர். வாகனங்கள். சப்பறம் முதலியவற்றையும் புதிதாக அமைப்பதற்கு அரும்பாடுபட் டார்.

மிகமுக்கியமாகக் குறிப்பிடப்பட வேண் டிய திருப்பணி ஆலய முகப்புக் கோபுரமாகும். ஆலய அமைப்பில் ராஜ கோபுரம் முக்கிய இடம் வகிப்பதாலும் ராஜகோபுர நிர்மாண அத்திவாரம் 1982 ஆம் ஆண்டளவில் இடப்பட்டு சுமார் 16 அடி உயரம் வரை கட்டுமானம் எழுந்தது. கட்டுமானததைத் தொடர்வதற்கு நாட்டு சூழ நிலை பாதகமாக இருந்தமையால் குருக்களின் சிந்தனைக்கு தடையாயிற்று. எனினும் குருக்களவர்களின் அயராத முயற் சியாலும் மெய்யடியார்களின் பங்களிப்பாலும் இலங்கையின் அடையாளமாக திகழும் வண்ணம் ராஜகோபுரத்திருப்பணி நிறை வேற்றப்பட்டு 01.07.2018 அன்று ராஜகோபுர மஹாகும்பாபிஷேகம் நடை பெற்றது.

நகுலேஸ்வர ஆலயம் யுத்த அனர்த்தங் களால் (1990) சேதமுற்ற போது மன முடைந்து துவளாமல் ஆலயத்தைப் புதுப் பொலிவுடன் சிவனடியார்களின் ஆதரவோடு வெளிநாடுகளுக்கும் சென்று நிதி திரட்டி ஆலயத்தை புனருத்தாரணம் செய்து 2012 ஆம் ஆண்டு தை மாத புனர்பூசத்தன்று தனது மூத்த புதல்வர் சிவாகமசிரோமணி குமாரசுவாமிக்குருக்களை பிரதான சிவாச் சரியாராக அமர்த்தி மஹா கும்பாபிஷே கத்தை நடாத்தினார்.

இம் மஹா கும்பாபிக்ஷேகத்தின் போது இலங்கையில்முதன்முறையாக இவ்வால யத்தில் சகஸ்ரலிங்கத்தை பிரதிஷ்டை செய்த பெருமை நகுலேஸ்வரக்குருக்களையே சாரும். அத்தோடு ஆலயத்தின் கண்டாமணி சிறு பழுதடைந்த காரணத்தால் பிரித்தா னியாவில் கீரிமலை சிவன் கோயில் அறக்கட் டளையை நிறுவி புதிய கண்டாமணியை செய்விப்பதற்கு ஆவன செய்தார். தற்போது அத்திருப்பணி பூர்த்தி செய்யப்பட்டிருப்பது இறைவன் சித்தமாகும்.




குருக்களவர்களின் பாரியார் ஸ்ரீமதி வேதநாயகியம்மா அவர்கள் இல்லறத் துணைவி என்ற மொழிக்கு இலக்கணமாக ஆலயத்தின் திருப்பணிகளின் போதும். மஹா கும்பாபிஷேகத்தின் போதும் சிவசக்தி போல் நகுலேஸ்வரக்குருக்களிற்கு பக்கபல மாக வாழ்ந்து மஹா கும்பாபிஷேகத்தையும் தரிசித்து 2012 ஆடி பூர்வ பக்க த்ரயோதசி கொண்ட பிரதோஷத்தன்று நகுலேஸ்வரரடி சேர்ந்தார். குருக்கள் அவர்கள் 2014 ஆம் ஆண்டு 25 வருடங்களின் பின்னர் மீண்டும் மஹோற்சவத்தை ஆரம்பித்து உற்சவங்கள் செவ்வனே நடைபெற ஆவன செய்தார்.

தனது முதுமை காரணமாக ஆலய நிர் வாகத்தை மூதாதையர்களின் தர்மசாச னப்படி தனது மூத்த குமாரரிடம் ஒப் படைத்து கடந்த 15.07.2023 ஆனித்திங்கள் கிருஷ்ண பக்ஷ த்ரயோதசி திதியில் சனிமஹா பிரதோஷத்தன்று தனது 98 ஆவது வயதில் நகுலேஸ் வரப்பெருமானோடு இரண்டறக்கலந் தார்.

நகுலேஸ்வரக்குருக்களவர்கள் 1985 ஆம் ஆண்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் மகோற்சவ குருவாக இருந்து உற்சவத்தை திறம்பட நடத்தியதோடு பொலி கண்டி கந்தவனம் சுப்பரமணிய சுவாமி கோவில் போன்ற பல உள்நாட்டு ஆலயங்களிலும் அவுஸ்திரேலிய சிட்னி முருகன் கோவில். கனடா றிச்மன்கில் பிள்ளையார் கோவில் முதலிய பல வெளிநாட்டு ஆலயங்களிலும் மகோற்சவ குருவாகவும் பிரதிஷ்டா குருவாகவும் இருந்து உற்சவங்களையும். விழாக்க ளையும் நடத்தியதோடு பல ஆலயங் களின் ஆலோசகராகவும் தனது பணியை ஆற்றினார். இந்தியாவில் தருமபுர ஆதீ னத்தின் வைத்தீஸ்வரன் கோவில். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் கும்பாபி ஷேகங்களிலும் கலந்து கொண்டார்.

குருக்களவர்கள் பல சமய சமூக பணிகளையும் ஆற்றினார். குறிப்பாக 1967 ஆம் ஆண்டு சைவானுட்டான பாதுகாப்புச் சபையை நிறுவி ஆதீனத்தையே தலை மையகமாகக் கொண்டியங்க வைத்த பெரு மையும் குருக்களுக்குரியது. இந்நிறுவனத் தின் போஷகராக இருந்து ஆலோசனை களையும் வழங்கி வந்தார்.

1976 ஆம் ஆண்டளவில் நகுலேஸ்வர ஆதீனத்தில் சிவநெறிக் கழகம் என்ற சமய அமைப்பை நிறுவி அதன் தலைவராக பல ஆண்டுகள் கடமையாற்றியதோடு பாட சாலை மாணவரிடையே நீதிச்செய்யுள் கதாப்பிரசங்கம். பண்ணிசை. பூமாலை தொடுத்தல். கோலம் போடுதல் ஆகிய துறைகளில் போட்டி வைத்து பரிசுகள். பத்திரங்கள் வழங்கி பெரும் சேவை ஆற்றினார்.

அத்தோடு சைவ மக்களிடையே பரவிவந்த பசுமாமிச உணவை வெறுக்கும் படி செய்ய பசு ஊர்வலம் நடத்த முன்னின்று உழைத்தவர் குருக்கள். ஆலயத்திலிருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் வரை அலங்கரிக்கப்பட்ட பசு மாடுகள் பல பதாகை களோடு ஊர்வலமாக நடத்திக்கொண்டு செல்லப்பட்டமை பசுக்காத்தல் புண்ணி யத்துக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

குருக்களவர்களுக்கு 'வேதாகம பூஷ ணம்'. 'சிவாகமகிரியாரெத்தினம்'. 'சிவாகம வித்வான்' போன்ற பல உயரிய பட்டங் களும் பல ஆலயங்கள். நிறுவனங்களால் வழங்கப்பட்டன. 2000 ஆம் ஆண்டு குருக்களின் பவள விழாச்சபையினர் 'நகுலேஸ்வரானுக்ரஹ வித்யாதரர்' என்னும் கௌரவத்தை குருக்களுக்கு வழங்கினர். 2021 ஆம் ஆண்டு இந்தியா தருமபுர ஆதீனத்தால் இலங்கையில் முதலாவதாக குருக்கள் அவர்கட்கு 'சிவாகம கலாநிதி' எனும் அதியுயர் பட்டத்தை வழங்கி கௌரவித்தது. குருக்களின் சாதனையை மெருகூட்டுமுகமாக கடந்த 21.03.2024 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இரண்டாவது அனைத் துலக சைவ மாநாட்டில் தேகாந்த நிலையில் 'மெய்ப்பொருள்' விருது வழங்கி கௌரவித்தது.

மறைந்த ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ் வரக்குருக்களின் அடையாளமாக நகுலேஸ் வரசுவாமி கோவிலின் சிவமஹா ராஜகோ புரமும். சகஸ்ர லிங்கமும் என்றும் நிலைத் திருப்பதோடு புதிய கண்டாமணியின் ஓசை குருக்களவர்கள் நகுலேஸ்வரப் பெரு மானை துதிக்கும் பொருட்டு தினமும் பூஜை காலங்களில் ஒலிக்கும் என்பதில் ஐயமில்லை.


**சிவஸ்ரீ. கார்த்திகேயக்குருக்கள்**
**துரைச்சாமிக்குருக்கள்**
**நகுலேஸ்வரம் சிவன் கோவில்,**
**கீரிமலை.**

(1480)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## அம்பானி இல்ல திருமண விழா நேரில் சென்று வாழ்த்திய மோடி



(டில்லி)

ஆனந்த் அம்பானி திருமணத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதித்தார்.

ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரரான முகேஷ் அம்பானியின் கடைசி மகன் ஆனந்த் அம்பானி - ராதிகா மெர்ச்சண்ட் திருமண விழா மும்பையில் அமைந்துள்ள ஜியோ உலக மாநாட்டு மையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் சினிமா நட்சத்திரங்கள், கிரிக்கெட் பிரபலங்கள், அரசியல் வாதிகள், பிரபல தொழிலதிபர்கள் என உலகம் முழுவதும் இருந்து பல விஐபிகள் கலந்து கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மும்பையில் உள்ள ஜியோ உலக மாநாட்டு மையத்தில் ஆனந்த் அம்பானி - ராதிகா மெர்சண்ட் தம்பதியரின் திருமண வரவேற்பு நிகழ்வான 'ஷுப் ஆசிர்வாத்' நிகழ்வு நடைபெற்றது.

இதில் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், துறை சார்ந்த பிரபலங்கள் பங்கேற்றனர்.

இதில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் பங்கேற்றார். பிரதமர் மோடியின் கால்களைத் தொட்டு ஆனந்த் அம்பானி - ராதிகா மெர்சண்ட் வணங்கினர். பதிலுக்கு பிரதமர் மோடி தனது வாழ்த்தினை தெரிவித்தார்.

அருகில் இருந்த ஆனந்த் அம்பானியின் பெற்றோர் முகேஷ் அம்பானி மற்றும் நீட்டா அம்பானி, ராதிகா மெர்சண்டின் பெற்றோர் ஆகியோரிடமும் தனது வாழ்த்தினை தெரிவித்தார். (நி)

# ட்ரம்ப் மீது துப்

## சந்தேக நபர்கள்

### படுகொலை முயற்சி என்ற

**(வோஷிங்டன்)**

**அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது பட்லர் பென்சில்வேனியாவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**



தேர்தல் பிரசாரத்தின் போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் இரகசியசேவைப் பிரிவினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டவரும் பேரணியில் கலந்து கொண்ட ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ட்ரம்ப் உரையாற்றிக் கொண்டிருந்தவேளை மாலை 6.13 மணியளவில் பாரிய சத்தங்கள் கேட்டுள்ளன.

ட்ரம்பின் வலதுகாதை ஏதோ தாக்கியதை அங்குள்ளவர்கள் அவதானித்துள்ளனர். அவர் தனது காதைப்பிடித்தபடி நிலத்தில் அமர்வதை வீடியோக்கள் காண்பித்துள்ளன.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உடனடியாக அவரின் உதவிக்கு விரைந்துள்ளனர்.

முகத்தில் இரத்தத்துடன் எழுந்து நின்ற ட்ரம்ப் கைகளை உயர்த்தி போராடுங்கள் போராடுங்கள் என தெரிவித்துள்ளார்.

## சிரிப்பது கட்டாயம் ஜப்பானில் புதிய சட்டம்

(டோக்கியோ)

சிரிப்பு என்பது வாழ்க்கையை அழகாக்கும் ஒரு மருந்து எனலாம். சுழலும் இயந்திர உலகில் வாய் விட்டு சிரிப்பதை பலர் மறந்து இருக்கும் நிலையில் ஜப்பானின் யமகட்டா மாகாணத்தில் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது சிரிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சிரிப்பதால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன என்பது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது சிரிப்பதன்



மூலம் இதய நோய் பாதிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அம்மாகாணத்தில் வசிக்கும் மக்கள் நாளொன்றுக்கு ஒருமுறையாவது சிரிக்க வேண்டும் என்ற சட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் மாதத்தின் 8 ஆவது நாளை சிரிப்பு தினமாக கடைபிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## பாதுகாப்பு வலயத்தில் 71 பாலஸ்தீனியர்கள்

(ஜெருசலேம்)

காசாவின் ஹான் யூனிசில் உள்ள அல்மவாசிப் பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 71 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாசின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் பாதுகாப்பு வலயம் என அறிவித்த பகுதியிலேயே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

289 பேர் காயமடைந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகின்றன.

இந்தத் தாக்குதல் குறித்து



விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள இஸ்ரேலிய இராணுவம் ஹமாசின் சிரேஸ்ட தலைவர் ஒருவரை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துப்பாக்கிச் சூடு! ...சுட்டுக்கொலை!

## ...கோணத்தில் விசாரணை



அதன் பின்னர் அவர் உடனடியாக பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற பகுதி குற்றச்செயல் இடம்பெற்ற பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. ட்ரம்ப் நலமாக உள்ளார் என அவரது அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


தாக்குதலை மேற்கொண்டவர் எனக் கருதப்படும் சந்தேகநபரும் பேரணியில் கலந்துகொண்ட ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

படுகொலை முயற்சி என்ற அடிப்படையில் விசாரணைகள் இடம்பெறுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ட்ரம்பின் தேர்தல் பிரசார நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருந்த பகுதிக்கு அருகிலிருந்த உயரமான இடத்திலிருந்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் இரகசிய சேவைபிரிவினர் தெரிவித்துள்ளனர். (நி)

# சடுதியாக அதிகரிக்கும் உலக மக்கள் தொகை

## ஐ.நா எச்சரிக்கை




(ஜெனீவா)

உலக மக்கள் தொகை அடுத்த 50 முதல் 60 ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரிக்கும் எனவும் இந்த ஆண்டின் இறுதியில் 820 கோடியாக உயரும் என ஐ.நா சபை தெரிவித்துள்ளது.

அத்தோடு 2080 ஆம் ஆண்டுகளின் மத்தியில் உலக மக்கள் தொகை சுமார் 1030 கோடியாக உச்சத்தை எட்டுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அதன்பின்னர் படிப்படியாக குறையத்தொடங்கி நூற்றாண்டின் இறுதியில் 1020 கோடியாக இருக்கும் எனவும் ஐ.நா தெரிவித்துள்ளது.

உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு உலக நாடுகளில் மக்கள் தொகை பெருக்கம் தொடர்பாக ஐ.நா. சபையின் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான சீனாவை பின்னுக்குத் தள்ளி முதலிடத்திற்கு வந்த இந்தியா 2,100 ஆம் ஆண்டு வரை முதலிடத்தில் நீடிக்கும் எனவும் இந்த நூற்றாண்டு முழுவதும் உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 145 கோடியாக இருக்கும் எனவும் இது 2054 ஆம் ஆண்டில் உச்சபட்சமாக 169 கோடியாக உயர்வதுடன் 2100 ஆம் ஆண்டின் இறுதியில் 150 கோடியாக குறையும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. (நி)

# ...ல் தாக்குதல் ...ள் உயிரிழப்பு



...துள்ளது.

தாக்குதல் இடம்பெற்ற பகுதி பூகம்பம் தாக்கிய பகுதி போல காணப்படுவதாக சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் பிபிசியிடம் தெரிவித்துள்ளார். (நி)

# ரஷ்யாவின் எண்ணெய் கிடங்கை ட்ரோன் மூலம் அழித்த உக்ரைன்


(கீவ்)

உக்ரைன்- ரஷ்யா இடையிலான போர் இரண்டு ஆண்டுகளை தாண்டி நடைபெற்று வருகிறது. தற்போது ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

ரஷ்யா தொடர்ந்து உக்ரைன் எரிசக்தி உள்ளிட்ட கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேபோல் அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன் உக்ரைனும் ரஷ்யா மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை ரஷ்யாவின் தென்மேற்கில் உள்ள ரோஸ்டவ் மாகாணத்தில் உள்ள பகுதியில் உக்ரைன் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தி உள்ளது.



இந்தத் தாக்குதல் காரணமாக எண்ணெய் கிடங்கு தீப்பற்றி எரிந்தது. சுமார் ஐந்து மணி நேர போராட்டத்திற்குப் பின் தீ அணைக்கப்பட்டுள்ளது. சுமார் 2100 சதுர அடி அளவிற்கு தீ பரந்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இந்த தீ விபத்தால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

மேலும் இரண்டு ட்ரோன்கள் பறந்து வந்த நிலையில் ரஷ்யாவின் வான் பாதுகாப்பு சிஸ்டம் அவற்றை இடைமறித்து அழித்துள்ளது.

அதேவேளையில் ரஷ்யாவின் ஐந்து ட்ரோன்களில் நான்கு ட்ரோன்களை உக்ரைன் வான் பாதுகாப்பு சிஸ்டம் இடைமறித்து அழித்துள்ளது.

ஒரு விமானம் பெலரஸ் திசையில் உக்ரைன் வான் வெளியை விட்டு வெளியேறியதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு பாழ்ப்பாணத்து மூலிகை

# பசுநெய்யின் மருத்துவக் குணங்கள்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நெய்யானது சிறந்த உணவுக் கூறுமட்டுமல்ல, சிறந்த மருந்தும் சிறந்த அனுபானமுமாகும். நெய்யானது மந்த குணமுள்ளது. இலகுவில் செமிக்காது எனப்பலர் கூறுவர். ஆனால் உருக்கிய நெய்யானது பசித்தீயை தூண்டவல்லது. தீபன பாசனத்தை அதாவது ஜீரணம் ஏற்படுவதற்கு பெரிதும் உதவக் கூடியது. அதனால் தான் குழந்தைகளுக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்குக் கூட உணவின் ஆரம்பத்தில் குறிப்பாக மதிய உணவின் போது நெய் சேர்க்கும் வழக்கம் காணப்படுகிறது.

எமது மருத்துவ முறைப்படி காலை வெறும் வயிற்றில் உருக்கிய நெய் தினமும் காலையில் ஒரு தேக்கரண்டி குடித்த பின்பு 200 மில்லி வெந்நீர் அருந்தின் சிறந்த மருத்துவக் குணங்களைப் பெறமுடியும்.

அதுமட்டுமின்றி சித்த மருத்து



வத்தில் பெரும்பாலான மருந்துகள் நெய் வடிவில் (Medicated Ghee) உள்ளதும் குறிப்பிடத்தக்கது. நெய் ஒரு போசாக்குணவு.பசித்தீயை தூண்டவல்லது.

நெய்யில் உயிர்ச்சத்து முன்னோடியான கரோட்டீன் உள்ளது. கண் பார்வைக்கு சிறந்தது. மாலைக்கண் நோய் ஏற்படாமல் தடுக்கவல்லது. நெய்யுடன் சேர்த்து மருந்துகள் இலகுவில் குடலில் அகத்துறிஞ்சப்படும். உயிர்ச்சத்து A,D,E,K அகத்துறிஞ்சலில் நெய் உதவக்கூடியதாக இருக்கும். நெய் சேர்ந்த மருந்துகள் இலகுவில் மூளைக்கு சென்று தொழிற்படவல்லன. நெய்யானது அதனுடன் சேர்ந்து செய்யப்படும் மருந்துகள் இலகுவில் கெட்டு போகாமல் பாதுகாக்கப்படுகின்றது.

அத்துடன் நெய்யும் சோறும் சேர்த்து உண்டால் உடல்பலம் பெறும். பித்த நோய்கள் ஏற்படாது. கண் குளிர்ச்சி, கண் பார்வை தெளிவு பெறும்.நெய் உடம்பிற்கு நல்லது. அளவாக நெய் சாப்பிட்டால் உடல் நிறையைக் குறைக்கும். நெய்யில் Medium changed fatty acids இருக்கிறது. இது உடம்பிலுள்ள மற்றைய கொழுப்புக்களை குறைக்கக் கூடியதாக உள்ளது.

அத்துடன் நெய்யிலுள்ள உயிர்ச்சத்து A ஆனது கல்லீரலை நன்நிலையில் வைத்திருக்கும். ஓமோன்களை நடுநிலையில் வைத்திருப்பற்கு ஏதுவாக இருக்கும். அத்துடன் லினோலிக்கமிலம் அதிகமாக உள்ளதால் மார்பகப்புற்று நோய் வருவதை தடுக்கக்கூடியதாக உள்ளது.

அத்துடன் நெய்யினிலுள்ள புயூற்றிரிக்கமிலம் உள்ளதால் உடலை வளமாக வைத்திருப்பதற்கும், செரிமானம் நன்நிலையில் நடப்பதற்கும், சில வகை புற்று நோய்கள் ஏற்படாமல் இருப்பதற்கும் உதவுகிறது. மேலும் நெய்யில் உயிர்ச்சத்து K உள்ளது. நாம் எடுக்கும் உணவுகளிலிருந்து கல்சியச் சத்துக்களை என்புகளுக்கு கொண்டு சேர்ப்பதற்கு அவசியம். பசுப்பாலில் காணப்படும் கேசினும் லக்டோசும் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும்.

இதனால் பசுப்பால் சிலருக்கு ஒத்துக் கொள்வதில்லை. மேற்படி இரண்டு பொருளும் நெய்யில் காணப்படாமையால் பால் அலர்ஜி உள்ளவர்கள் நெய்யைப் பயன்படுத்தலாம். எனவே நெய்யானது பாரம்பரிய இயற்கையான உணவு பொதுவாக நெய்யை சோறு, பருப்புடன் சேர்த்து உண்ணும் போது சக்கரை உயர்த்தும் திறனைக் குறைக்கிறது.

நெய்யில் உள்ள கொழுப்பானது இவ்வாறு சேர்த்து உண்ணும் போது செரிமானம் இருப்பதால் நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தலாம். கடினமான உணவுகளைக் கூட நெய்யுடன் சேர்த்து உண்ணும் போது இலகுவாக எடுக்கக் கூடியதாக இருக்கும். (Palatability) உணவு போதும் என்ற நிலையையும் ஏற்படுத்தும். (Satiety) குடற்புண்களை வராமல் தடுக்கும் தன்மையும் நெய்யில் உண்டு.

இவ்வளவு மருத்துவக் குணங்களைப் பெற அளவாக நெய் எடுக்க வேண்டும். தினமும் 1-2 தேக்கரண்டி அளவு எடுக்கலாம். குழந்தைகளுக்கு கட்டாயம் நெய் கொடுக்க வேண்டும். பெரும்பாலும் இயற்கையான, சுத்தமான நெய்யாக இருக்க வேண்டும். இதற்கு வீட்டிலேயே நெய் தயாரித்துக் கொள்வது சிறந்ததாகும்.

நெய்யில் இருக்கும் நெய்யில் short chain and Medium chain fatty acid இது சர்க்கரையை செரிமானம் செய்யும் சக்தியாக மாறி வெளியே



போய் விடும். உடம்பில் தேங்குவதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு. எனவே உடம்பில் இந்தக் கொழுப்பானது தேங்காது. அத்துடன் நெய்யிலுள்ள ஒமேகா-3 கொழுப்பமிலமானது இருதயத்தை சீராக்க உதவுகிறது. தலைமுடி உதிர்வு உள்ளவர்களும் இவ் தூய சுத்தமான பசு நெய் பயன்படுத்தலாம். தோல் சுருக்கங்களையும் ஏற்படாமல் தடுக்கக்கூடியது. பல ஆண்டு காலங்களிற்கு முன்பே எம்முன்னோர்கள் இவ் நெய்யை பயன்படுத்தி உள்ளனர். எமது உடலின் ஆரோக்கியத்திற்கும் நெய் அவசியமானது.

## இன்று ஒரு தகவல் 182



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உருவமும் உள்ளமும்

ஒரு முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தார். வெகு நாளாக அப்படியே உட்கார்ந்திருந்தார். அவருக்கு ஒரு சக்தி வந்து விட்டது. அதற்குப் பின் தான் லேசாக கண்ணை முழித்துப் பார்த்தார். அவரது கண்ணிற்கு முன்னே ஒரு எலி பயந்து நடுங்கிக்கொண்டிருந்தது. இந்த எலி ஏன் இப்படி நடுங்குகிறது? என்று யோசித்தார். உடனே அதற்கான காரணத்தையும் கண்டுபிடித்து விட்டார்.

அவருக்குப் பின்னால் ஒரு பூனை நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்து விட்டுத் தான் அந்த எலி நடுங்குகிறது. உடனே அந்த எலிக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தார். தன்னுடைய தவ வலிமையை உபயோகப்படுத்தினார்.

அந்த எலியை பூனையாக மாற்றிவிட்டார். இனிமேல் அந்த எலி பூனைக்காக பயப்பட வேண்டியதில்லை. அது தான் அவருடைய எண்ணம். இப்படி செய்து விட்டு அந்த முனிவர் கண்ணை மூடிக்கொண்டார். மறுநாள் காலையில் லேசாக கண்ணைத் திறந்து பார்த்தார். நேற்று ஒரு எலியை பூனையா மாற்றினார் அல்லவா. அந்தப் பூனை இப்போது பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

இன்னமும் ஏன் நடுங்குகிறது என்று பார்த்தார். பின்னாடி, ஒரு நாய் நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு தானே இது நடுங்குது! இப்போழுது இதையும் ஒரு நாயாக மாற்றிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நினைத்தார். அதே மாதிரி செய்தும் விட்டார்.

மறுபடியும் மறுநாள் கண்ணைத் திறந்து பார்த்தார். இப்போது அந்த நாயும் நடுங்கிக் கொண்டே நின்று கொண்டிருந்தது. அதற்குக் காரணம் முனிவருடைய முதுகுக்ககுப் பின்னால் நின்று கொண்டிருந்தது நரி.

சரி... என்னிடம் தான் தவவலிமை இருக்கே. இந்த நாயையும் நரியாக்கி விடுவோம் என்றார் முனிவர். அதே மாதிரி ஆக்கினார். நாயாக இருந்தது நரியாக மாறிவிட்டதால் இனியாவது அது நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தார். அந்த நம்பிக்கையும் நீடிக்கவில்லை.

அந்த நரியும் நடுங்க ஆரம்பித்தது. என்ன என்று பார்த்தால் பின்னாடி ஒரு புலி நின்று கொண்டிருக்கு கண்ணை உருட்ணுக் கொண்டு. முனிவர் சளைக்கவில்லை. நரியை புலியாக்கினார். இப்போது அவர் மனசுக்குள்ளே ஒரு நிம்மதி.

அப்பாடா... புலியை பயமுறுத்துற அளவுக்கு இன்னொரு மிருகம் வரப்போறதில்லை. அதனால் பிரச்சினை இதோடு தீர்ந்துவிடும். இனிமேல் இந்தப் புலி எதுக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. என்று நினைத்து நிம்மதியாக கண்ணை முடிக்கொண்டார்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் இலேசாக கண்ணை முழித்துப் பார்த்தார். புலி நடுங்கிக் கொண்டிருந்தது.முனிவருக்குக் கோவம் வந்துவிட்டது. இருந்தாலும் புலியே பார்த்து நடுங்கக் கூடிய அளவுக்கு அப்படி பயங்கரமான மிருகம் என்னவாக இருக்கும் என்று தெரிந்து கொள்வதற்கு அவருக்கும் ஆசை. சிங்கமாக இருக்குமா? யானையாக இருக்குமா? பின்னாடி திரும்பி பார்த்தார்.

அங்கே ஒரு பூனை நின்றுகொண்டிருந்தது. ஒரு பூனையைப் பார்த்துவிட்டு எலி பயப்படலாம். புலி பயப்படலாமா? இது ஏன் இப்படி பயப்படுகிறது. இப்பத்தான் முனிவருக்கு ஒரு உண்மை புரிந்தது.

ஆரம்பத்திலே எலியாக இருந்தது படிப்படியாக மாறி இப்போது புலியாக இருக்கிறது. அது உண்மைதான் இருந்தாலும் உருவம் தான் மாறிக் கொண்டு வந்திருக்கே தவிர உள்ளம் அப்படியே தான் இருக்கிறது.

உருவத்திலே தான் அது புலி. உள்ளத்திலே அது இன்னமும் எலிதான். அதனால் தான் எதிரிலே பூனையை பார்த்ததும் எலிக்கே உரிய பயம் வந்துவிட்டது. முனிவர் இதைப் புரிந்து கொண்டவுடனே அந்தப் புலியை மறுபடியும் எலியாக மாற்றினார். பூனையிடம் சிக்காமல் பத்திரமாக அதைக் காப்பாற்றி அனுப்பி வைத்தார். போய் பத்திரமாக சேரு என்று இன்னொரு விடயமும் அவர் புரிந்து கொண்டார்.

என்ன தான் தெய்வீக வரம் எனக்குக் கிடைத்தால் கூட நான் இறைவனின் பிரதிநிதி தானே தவிர நானே இறைவன் அல்ல என்பதை உணர்ந்தார். கிடைக்கின்ற சக்தியை ஞாயமாகப் பயன்படுத்த வேண்டுமல்லவா. நமது ஆள் ஒருவர் மனைவிக்குப் பயந்து கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் காட்டுக்கு ஓடிப் போய்விட்டார்.

சும்மா ஓடினால் கண்டுபிடித்து விடுவார்கள் என்று கரடி வேடம் போட்டுக் கொண்டு போய் ஒரு தனிமையான இடத்திலே உட்கார்ந்து கொண்டார்.அங்கே கிடைக்கின்ற காய் கனிகளை சாப்பிட்டுக் காலம் தள்ளினார். தவம் செய்தார். தவ வலிமை கிடைத்த பிறகு தான் வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்கிறது அவரோட முடிவு. ஒரு நாள் காலையில் லேசாக கண்ணை முழித்துப் பார்த்தார். எதிரிலே நிஜமாகவே ஒரு கரடி வந்து உட்கார்ந்திருந்தது. இவர் பயந்து நடுங்கிப் போய்விட்டார். இவர் உடம்பு நடுங்க ஆரம்பித்தவுடனே அந்தக் கரடி பேச ஆரம்பித்தது.

பயப்படாதே மாமா நான் கரடி இல்லை. உன் மச்சான். அக்கா தான் இந்த வேடம் போட்டு என்னை இங்கே அனுப்பி வைத்தார். உன்னை கண்டுபிடித்துக் கூட்டிக் கொண்டு வருவதற்காக வேடத்தைக் கலைத்துவிட்டு வீட்டுக்குப் புறப்படு அப்படி என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசுமோட்டை முருகானந்தாவில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரிக்கு நீண்ட தூரம் நடந்து வரும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நான்கு கிலோ மீற்றர் வரையான தூரத்திலிருந்து நடந்து வரும் மாணவர்கள் பாடசாலைக்கு தாமதமாக வரும் அதே வேளை ஏனைய கற்றல் சார் செயற்பாடுகளிலும் வாய்ப்புக்களை இழக்கின்றனர். அத்துடன் மாலை நேரக் கற்றல் செயற்பாடுகளிலும் இடர்படுகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு அதிக தூரத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் செயற்றிட்டம் ஒன்றை கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக 6 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன. இதற்கான அனுசரணையை பிரான்சில் வாழும் செல்லத்துரை செல்வநாயகம் வழங்கியிருந்தார். கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, பூநகரி, வேரவில், அக்கராயன் போன்ற பிரதேசங்களில் குறைந்தது ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரை மாணவர்கள் நடந்து பாடசாலைக்கு வருகின்ற நிலைமை காணப்படுகின்றது. (நி-350)



கிளிநொச்சி கரைச்சி கல்விக் கோட்ட விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது. கரைச்சி கல்விக் கோட்டப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் தலைமையில் கிளிநொச்சி றொட்ரிக்கோ மைதானத்தில் இப்போட்டிகள் இடம் பெற்றன. 42 பாடசாலைகள் பங்கு கொண்ட இப்போட்டியில் 1ஏபி, சி தர பாடசாலைகளில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி முதலாம் இடத்தினையும் தரம் 11 பாடசாலைகளில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயமும் பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் அனைத்து பிரிவிலும் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி முதலாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன. (படம்: கிருஷ்ணகுமார்)

# பாழடைந்த கிணற்றிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு


(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி சின்னப்பல்லவராயன்கட்டு கிராமத்தில் பாழடைந்த கிணற்றில் இருந்த துப்பாக்கி ரவைகள் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் மீட்கப்பட்டுள்ளன.

ஆடு ஒன்றினை காணவில்லை என தேடிச் சென்ற போது பாழடைந்த கிணற்றில் உரப்பை மிதப்பைக் கண்டு அதனை பிரித்து பார்த்த போது துப்பாக்கி ரவைகள் இருந்ததை கண்டு பூநகரி பொலிஸாருக்கு பொது மக்கள் தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் வருகை தந்து துப்பாக்கி ரவைகளை எடுத்துச் சென்றுள்ளனர். (நி-350)



# பஞ்சபுராணம் ஓதுதல் போட்டியில் முதலிடம்




(அக்கராயன்)

கிளிநொச்சி ஆனந்தபுரம் மீனாட்சி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பஞ்சபுராணம் ஓதுதல் போட்டியில் முதலாம் இடத்தினையும் வெற்றிச் சான்றிதழையும் சசிறதன் அபிராம் பெற்றுக் கொண்டதுடன் காவடி நிகழ்வில் பங்குபற்றியமைக்கான பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார். (நி-350)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3169

### லெனின்

என்னங்க! என்னை முதல் முதலா பொண்ணு பார்த்த போது ஒரு லைட் மெரூன் கலர் சேர்ட் போட்டிருந்தீங்கள் எங்கே அது?



அது இராசியில்லை என்று அப்பவே தீயில போட்டு கொளுத்திட்டேன்

### பிரியா



இந்த மனுஷங்கள் ரொம்ப மோசம் அவன் பிள்ளை ஓடி போனதுக்கு ஓடுகாலி கழுதைன்னு எங்களை திட்டுறான் இவன் குடிச்சிட்டு வராதுக்கு அவன் பொண்டாட்டி குடிகார நாயே என்று எங்களை திட்டுறா

### கார்த்தி

என் மனைவி வாயை கட்டிப்போட ஏதாச்சும் மந்திரம் சொல்லுங்கள் சாமி



அது பண்ண முடியாமல் தான் நான் சாமியாரா ஆனேன் மகனே

### சஞ்சய்

என்னன்னே அம்புலன்ஸ் ஸ்பீடா போகுது உள்ள யாரு இருக்கிறாங்கள்



கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வண்டில அதவிட ஸ்பீடா போனவன் தான்...

### அனுபா


நேற்று நீங்கள் காரில போகும் போது அக்ஸிடென்ட் ஆச்சாமே எப்படி? அதோ அங்க ஒரு புளியமரம் தெரியுதா?



ஆமாம் தெரியுது அது நேற்று எனக்கு தெரியல

### தீபன்

இந்த மிடில் கிளாஸா வாழுறது ரொம்ப கஷ்டமப்பா



பக்கத்து வீட்டுக்காரன் பார்த்தால் பணக்காரனா நடிக்கனும் தெரிஞ்சவன் கடன் கேட்டால் ஏழையா நடிக்கனும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 533





ஐயோ! படகு எங்கே போயிருக்கும்?'

'ஒருவேளை தான் இல்லாத சமயத்தில் பழுவேட்டரையரின் ஆட்கள் இங்கேயே வந்திருப்பார்களோ? வந்து இளவரசரையும் வந்தியத்தேவனையும் சிறைப்படுத்திக் கொண்டு போயிருப்பார்களோ? அப்படி நடந்திருந்தால் கூடப் பாதகமில்லை. அதை விடப் பயங்கரமான சம்பவம் நிகழ்ந்திருக்குமோ? வந்தியத்தேவன் இளவரசரைத் தூக்கிக் கொண்டு மறைந்த மண்டபத்தைத் தேடிப் போயிருப்பானோ? அப்படியானால் அங்கே கொலைஞர்கள் காத்திருப்பார்களே? அடடா! என்ன தவறு செய்து விட்டோம்?'

அந்த மறைந்த மண்டபத்துக்கு உடனே போய்ப் பார்க்க வேண்டுமென்ற பரபரப்பு பூங்குழலியின் மனத்தில் குடிகொண்டது. காட்டு வழியில் ஓட்டம் பிடித்து ஓடினாள். மறுபடியும் அந்தப் பழைய சந்தேகம்: 'வழி தவறி விட்டோமோ என்ற சந்தேகம். சுற்றிச் சுற்றி வருகிறோமோ என்ற மயக்கம்.'

'அது என்ன? ஐயோ! அது என்ன? ஏதோ காலடிச் சத்தம் போலிருக்கிறதே? யாரோ நம்மைத் தொடர்ந்து வருவது போலிருக்கிறதே? யாராயிருக்கும்? எதற்காக இருக்கும்? ஒரு வேளை அந்தப் பயங்கர மந்திரவாதி தானா? அப்படியானால் ஏன் பயப்பட வேண்டும்? இடுப்பில் செருகியுள்ள கத்தியை எடுத்துக்கொண்டால் போயிற்று! யாராயிருந்தால்தான் என்ன? எதற்காக ஓட வேண்டும்?'

'இல்லை, இல்லை! ஓட வேண்டியதுதான். இச்சமயம் யாருடனும் சண்டை பிடிக்கும் சமயம் அன்று. கையில் வலிவு இல்லை கத்தியும் குறி தவறிப் போகும். உயிரை எப்பாடுபட்டாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நமக்கு இத்தருணம் ஏதேனும் நேர்ந்தால் இளவரசருடைய கதியாதாகும்? முன்னமே அந்த வந்தியத்தேவன் எச்சரித்தானே? உயிரைப் பத்திரமாய்க் காப்பாற்றிக் கொண்டு வருவதாகச் சொன்னோமே? அதை நிறைவேற்ற வேண்டியது தான்?'

பூங்குழலி மேலும் மேலும் நெருக்கமான காட்டில் புகுந்து ஓடினாள். ஆனால் துரத்தி வந்தவன் மேலும் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். பூங்குழலி போன வழியில் மரங்களிலிருந்த பட்சிகள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடின. வளைகளிலிருந்து நரிகள் கிளம்பி ஓடின. தூங்கிய காட்டுப் பன்றிகள் விழித்தெழுந்து விழுந்தடித்து ஓடின. மான் ஒன்று விர்ரென்று பாய்ந்து வந்து அவள் மேலேயே இடித்துப் புடைத்துக் கொண்டு ஓடியது. இவ்வளவுக்கும் மத்தியில் பின்னால் தொடர்ந்து வந்தவன் விட்டபாடாக இல்லை. அவனுடைய காலடிச் சத்தமும் அவன் ஓடியதால் பெருமூச்சு விடும் சத்தமும் கேட்டுக் கொண்டேயிருந்தன. பூங்குழலி ஓடி ஓடிச் சலித்துப் போனாள். அந்தச் சலிப்பு அளவில்லாத கோபமாக மாறியது. வருகிறவன் யாராயிருந்தாலும் அவனை ஒரு கை பார்த்து விடுவது என்று முடிவு செய்தாள்.

### அத்தியாயம் 7 - காட்டில் எழுந்த கீதம்

பூங்குழலி கோபத்துடன் ஓடுவதை நிறுத்தித் திரும்பி நின்ற அதே சமயத்தில், இருள் சூழ்ந்த அக்காட்டகத்தே, ஓர் இனிய கீதம் எழுந்தது.

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து மின்னார் செஞ்சடை மேல் மிளிர்கொன்றை அணிந்தவனே!"

அந்தக் குரல் சேந்தன் அமுதனுடைய குரல் என்பதைப் பூங்குழலி உடனே அறிந்துகொண்டாள். கலகலவென்று சிரித்தாள். காலடிச் சத்தம் வந்த திசை வேறு என்பதைக் கூட அச்சமயம் அவள் மறந்து போனாள்.

"அத்தான்! நீதானா? ஆமாம்! பூங்குழலி!" எங்கே இருக்கிறாய்? இப்படி வா!" "இதோ வந்து விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே சேந்தன் அமுதன் அவள் முன்னால் வந்தான்.

"நன்றாய் என்னைப் பயமுறுத்தி விட்டாய்! எதற்காக இப்படி என்னைத் தொடர்ந்து வந்தாய்?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முரட்டு ஆடு

அது ஒரு மலை அடிவாரம். அதன் அருகே அழகிய ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அங்கே ஆறு ஓடிக் கொண்டிருந்ததால் மலையடி வாரத்தில் பச்சைப் பசேல் என்று புல் வளர்ந்திருந்தது.



மலையடிவாரத்தின் மேலே ஆங்காங்கே காணப்படும் சம பரப்புப் பகுதியில் சின்னஞ்சிறு வீடுகள் இருந்தன. அங்கு வாழும் மக்கள் தங்களது பிழைப்புக்காக ஆடு, மாடு இன்னும் பிற கால்நடைகளை வளர்த்து வந்தனர். அதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் வளர்க்கும் ஆடுகள் மலையடிவாரத்தில் வளர்ந்துள்ள புல்லைத் தின்ன அங்கே மேய வரும். மாடுகளால் சரிவில் நிற்க முடியாததால் அவைகள் அங்கு வருவதில்லை.

அங்கே ஒரு முரட்டு ஆடு இருந்தது. உடல் பருத்து, கொம்புகள் இரண்டும் வளர்ந்து முறுக்கிக் கொண்டு நின்றன. அதைப் பார்த்து மற்ற ஆடுகள் பயந்து ஒதுங்கிப் போய் விடும். அதனால் அந்த முரட்டு ஆட்டுக்கு திமிர் வந்து விட்டது.

அது மேய்ந்து கொண்டிருக்கும் இடத்தின் அருகே வேறு ஆடுகள் வந்து விட்டால் அவைகளை முட்டி தூர விரட்டி விடும்.

ஒருநாள், ஆற்றின் கரையோரம் மேய்ந்து கொண்டிருந்த ஆடு ஒன்று ஆற்றினோரம் வந்த முதலையைப் பார்த்து விட்டு பயந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி வந்தது. பயந்து ஓடி வந்த அந்த ஆடு முரட்டு ஆடு மேய்ந்து கொண்டிருந்த இடத்தின் அருகே வந்து விட்டது.

அதைப் பார்த்த முரட்டு ஆடு ஓடி வந்த ஆட்டைப் பார்த்து, "நான் மேய்ந்து கொண்டிருக் கும் இடத்திற்கு நீ எப்படி வரலாம்" என்று கோபமாகக் கேட்டது.

அதற்கு அந்த ஆடு, "அங்கே முதலையைப் பார்த்தேன். அதனால் வேகமாக ஓடி வந்து விட்டேன்" என்று அமைதியாகச் சொன்னது.

முரட்டு ஆடோ அது சொன்னதைக் கேட்கவில்லை. ஓடி வந்த அந்த ஆட்டுடன் சண்டை போட ஆரம்பித்தது. அந்த ஆடோ சண்டைபோட விரும்பாமல் சமாதானமாகவே பேசியது. முரட்டு ஆடோ அது சொன்னதைக் கேட்கவில்லை. வேறு வழியின்றி அந்த ஆடு முரட்டு ஆட்டுடன் எதிர்த்து நின்று ஆக்ரோஷமாக சண்டையிட்டது.

மலைச் சரிவான பகுதியில் இரண்டு ஆடுகளும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் பொழுது முரட்டு ஆடு கால் சறுக்கி மலையடிவாரத்தில் உருண்டு போய் ஆற்றில் விழுந்தது.

ஆற்றின் கரையோரம் வாயைப் பிளந்து கொண்டு காத்திருந்த முதலை அந்த முரட்டு ஆட்டை கவ்விக் கொண்டு ஆற்றினுள்ளே சென்று விட்டது.

தானே பெரியவன் என்ற மமதை ஏற்பட்டால் இது தான் கதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
>
> ~ கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச உத்தியோகத்தர்களை கூண்டோடு இடமாற்றும் அவலம்

இடமாற்றம் என்ற சொற்பதத்தை உச்சரிக்காதவர்கள் இல்லை எனலாம். அந்தளவுக்கு இடமாற்றம் அனைத்து வீடுகளிலும் தாராளமாக உச்சரிக்கப்படுகிறது.

நாடு பூராகவும் இடமாற்றம் பேசுபடுபொருளாக இருப்பினும் நம் தமிழ்ப் பிரதேசங்களில் இடமாற்றம் என்ற சொற்பதம் அரச நிர்வாகத்தை அடிக்கடி ஈடாடச் செய்கிறது.

இதற்கு எங்கள் தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்தும் சமச்சீரான அபிவிருத்தியை எட்டாமையே மூலகாரணமாகும்.

ஆம், யாழ்ப்பாண நகரத்துக்கு அண்மையாக இருக்கக்கூடிய தீவகம் இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

இவ்வாறு பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய தீவகத்துக்கு, அரச உத்தியோகத்தரை இடமாற்றும்போது அவர்கள் வெறுப்போடு பணிக்குச் செல்கிறார்கள்.

தவிர, காலையும் மாலையும் பயணம் செய்யும்போது, சம்பந்தப்பட்ட அரச பணியாளர் தனது பணியைச் செம்மையாகச் செய்ய முடியாது என்பது நிறுதிட்டமான உண்மை.

இதுபோல கிளிநொச்சி மற்றும் வன்னி மாவட்டங்களில் இருக்கக்கூடிய பின்தங்கிய பிரதேசங்களுக்கும் செல்கின்ற அரச உத்தியோகத்தர்கள் ஏதோ கையொப்பமிட்டு வேதனம் பெற வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக அங்கு சென்று வருகிறார்களேயன்றி, மற்றும்படி அவர்களால் உச்சமான பணியை ஆற்ற முடியாதென்பது யதார்த்தமானது.

ஆயினும் இடமாற்றத்தை அமுல்படுத்துவதில் சீறிச்சினக்கின்ற அரச நிர்வாகத் தரப்பு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வசதி வாய்ப்புக்கள், அவர்களுக்கான தங்குமிடங்கள், அவர்களின் போக்குவரத்துச் செலவுகள், அவர்களின் குடும்ப நிலைமைகள் பற்றி இம்மியும் சிந்திப்பதாக இல்லை.

மாறாக இடமாற்றம் கிடைத்தும் அங்கு செல்ல முடியாத நியாயப்பாடுகள் இருக்கக்கூடியவர்களுக்கும் இடுக்கண் விளைவித்து அவர்களை அங்கு அனுப்பி வைக்கும்போது சம்பந்தப்பட்ட அதிகாரி ஆளுமைமிக்கவராக உயர்மட்ட அரச நிர்வாகத்தால் கணிக்கப்படுகிறார்.

பரவாயில்லை. துன்பத்தைச் சுமந்தபடி பஸ் வண்டியில் பயணம் செய்கின்றவர்களின் பெருமூச்சுத்தான் இத்துணை கனலாய் வீசுகிறதோ என்று நாம் எண்ணுவதுமுண்டு.

இவையொரு புறமிருக்க, அரச திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகளில் இருக்கக்கூடிய உத்தியோகத்தர்களைக் கூண்டோடு இடமாற்றம் செய்யும்போது, குறித்த அமைப்பின் நிர்வாகம் படுபாதாளத்தில் வீழ்ந்து விடுகிறது.

இதற்குப் பல உதாரணங்களைக் குறித்துரைக்க முடியும்.

எனவே இனிமேலாவது கூண்டோடு இடமாற்றம் வழங்குகின்ற நடைமுறையை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த தமிழ்ப் பிரதேசம் சார்ந்த அரச நிர்வாகம் முன்வர வேண்டும்.

# சுயநலவாதிகள் தமது அரசியல் நலனுக்காக மக்களை தவறாக வழிநடத்துகின்றனர்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

சுயநல அரசியல்வாதிகள் சிலர், தமது அரசியல் நலன்களுக்காக மக்களை தவறான திசையிலேயே வழி நடத்த முனைகின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களை மக்கள் அடையாளம் கண்டு புறக்கணிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பாரதி மண்டபத்தில் ஜனாதிபதியின் கல்விப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாடு முழுமையாக விடுபடாத போதிலும் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகூடிய முன்னுரிமை அளிப்பதாகவும் அதனடிப்படையில் தொடர்ந்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாம் பயணிப்பதன் ஊடாகவே ஓர் சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்றார்.

இதனிடையே கௌதாரி முனை கிராம அலுவலர் பிரிவின் வினாசியோடை கிராமத்தில் சிலோன் சீபூட் பார்ம் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினரால் 25 ஏக்கரில் சுமார் 1000 மில்லியன் ரூபா முதலீட்டில் அமையப் பெற்றுள்ள நவீன இறால் பண்ணையின் செயற்பாடுகளை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7, 350)

# ஜனாதிபதிக்கு இடையூறு விளைவித்தால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும்

## வஜிர அபேவர்தன எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு எவரேனும் இடையூறு விளைவிப்பார்களாயின் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். இந்த தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரலாற்று வெற்றியை பதிவு செய்வார்.

கட்சி வேறுபாடின்றி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு பலர் எதிர்பார்த்துள்ளனர்.

வீழ்ச்சிப் பாதையில் இருந்து வெகு குறுகிய காலத்திலேயே நாட்டை மீட்டெடுத்தவர் தற்போதைய ஜனாதிபதி.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பின் ஊடாக நாட்டில் இன்று பொருளாதார திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி இந்த நாட்டை பொறுப்பேற்றதன் காரணமாகவே வெகு விரைவாக வீழ்ச்சிப்பாதையில் இருந்து மீண்டெழ முடிந்தது.

எனவே ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு எவரேனும் இடையூறு விளைவிப்பார்களாயின் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும்.

ஏனெனில் நாட்டில் ஆட்சியமைக்க நினைக்கும் பலரிடம் பொருளாதார வேலைத்திட்டங்கள் கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# கட்டுநாயக்கவில் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துபாயில் வீட்டுப் பணிப்பெண்ணாக பணிபுரிந்துவிட்டு நாடு திரும்பிய 43 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணிடமிருந்து 100 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அவர் எதிர்வரும் 17ஆம் திகதி நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ம-7)

# பயணிகள் பேருந்தில் பெண்ணின் கூந்தலை வெட்டியவர் கைது

(கொழும்பு)

பயணிகள் பேருந்தில் இளம் பெண்ணொருவரின் கூந்தலின் ஒரு பகுதியை வெட்டிய மௌலவி என கூறப்படும் நபரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி - வத்தேகம வீதியில் பயணித்த பேருந்தில் தமது பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த சந்தேக நபர், தனது கூந்தலின் ஒரு பகுதியை கத்திரிக்கோலால் வெட்டியதாக 26 வயதுடைய மடவளையைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர், கண்டி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கட்டுகஸ்தோட்டை - வட்டாரதென்ன சந்திக்கு அருகில் சந்தேகநபரால் கூந்தல் வெட்டப்பட்டதைக் கண்ட அந்த இளம் பெண் அலறி அடித்துக்கொண்டு பேருந்தில் பயணித்த ஏனைய பயணிகளின் உதவியை நாடியுள்ளார்.

அப்போது, பேருந்தின் நடத்துனர் மற்றும் பயணிகள் பலர் வந்து சந்தேக நபரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

பின்னர், சந்தேகநபரை அதே பேருந்தில் அழைத்துச் சென்று கண்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7)

# கடலில் நீராடிய தென்கொரிய யுவதி மரணம்

வெலிகம பொலிஸ் பிரிவிலுள்ள கடலில் நீராடிக் கொண்டிருந்த வெளிநாட்டு யுவதி அலையில் அள்ளுண்டு செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தென்கொரியா நாட்டைச் சேர்ந்த 37 வயதுடையவர் ஆவார்.

கடல் அலையினால் அள்ளுண்டு செல்லப்பட்ட யுவதியை கடற்கரையின் உயிர்காப்பு பிரிவினர் மீட்டு மாத்தறை வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர், அவர் உயிரிழந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

# 13 வயது சிறுமியை தாக்கியவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை மஜீமா நகர்ப் பகுதியில் 13 வயது சிறுமியைத் தாக்கிய அவரது சிறிய தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியைத் தாக்கும் காணொளிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.

கைதானவர் வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான சிறுமியின் தாய், அவரது தந்தையை பிரிந்து பணிப்பெண்ணாக வெளிநாட்டிற்கு சென்றுள்ளார்.

இதனையடுத்து அந்த சிறுமியின் தந்தை மறுமணம் செய்து கொண்டுள்ளார்.

இந்த நிலையில் சிறுமியின் சிறிய தாய் அவரை தாக்கியுள்ளதுடன், குறித்த சிறுமி வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் – ஒரு பார்வை

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

18

### 2018 பங்களாதேஷ் பொதுத் தேர்தல்

மூன்று முறை நாட்டை ஆட்சி செய்த முன்னாள் பிரதமர் கலிதா ஜியா தலைமையிலான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி (BNP) மற்றும் முக்கிய எதிர்க்கட்சி கூட்டணியால் 2014 ஜனவரியில் நடந்த கடைசி பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தது நாம் அறிந்தொன்று. இதன் விளைவாக, பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் பல இடங்களில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டதுமல்லாமல் 2018 ஆம் ஆண்டுத் தேர்தலில் 300 இடங்களில் 234 இடங்களை கைப்பற்றி அபார வெற்றி பெற்றது.

ஜூலை 2017 இல், பாராளு மன்றம் கலைக்கப்பட்டால் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாகவும், தேர்தல் ஆணையம் கட்சி சார்பற்ற உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும் என்று பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி (BNP) கூறியது.

14 செப்டம்பர் 2017 அன்று அதிகாரப்பூர்வ தலைமை தேர்தல் ஆணையர் BNP தேர்தலில் போட்டியிடும் என்பதை உறுதிப்படுத்தினார். இருப்பினும், BNP தலைவி கலிதா ஜியா ஊழல் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வங்காளதேச உயர் நீதிமன்றம் ஜியா பதவிக்கு போட்டியிட தகுதியற்றவர் என்று தீர்ப்பளித்தது.

தலைமைத் தேர்தல் ஆணையர் கே.எம்.நூருல் /ஹுதா முதலில் டிசம்பர் 23, 2018 பொதுத் தேர்தல் திகதியாக அறிவித்தார். அட்டவணையின்படி, வேட்பாளர் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கடைசி திகதி நவம்பர் 19 மற்றும் வேட்பாளர்களை வாபஸ் பெறுவதற்கான கடைசி திகதி நவம்பர் 29 ஆகும். பொதுமக்களின் கூச்சலுக்குப் பிறகு, தேர்தல் திகதியை டிசம்பர் 30, 2018 என்று ஆணையம் மாற்றியமைத்தது, வேட்பாளர்களை வாபஸ் பெறுவதற்கான கடைசி திகதி டிசம்பர் 9 ஆகும்.

ஓகஸ்ட் 2017 இல், ஜாதியா கட்சி (எர்ஷாத்) தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ஹுசைன் எர்ஷாத், தனது கட்சி அவாமி லீக் தலைமையிலான மகா கூட்டணியை விட்டு வெளியேறி ஜனநாயக இடது மற்றும் இஸ்லாமிய ஜனநாயகக் கட்சிகளுடன் புதிய கூட்டணியில் சேர விரும்புவதாகக் குறிப்பிட்டார். நவம்பர் 2018 இல் கட்சி அவாமி லீக் தலைமையிலான கூட்டணியில் சேரப்போவதாக அறிவித்தது.

டிசம்பர் 28 அன்று, "திறந்த இடங்களில்" போட்டியிடும் ஜாதியா கட்சி வேட்பாளர்களை ஆளும் அவாமி லீக் தலைமையிலான மகா கூட்டணி வேட்பாளர்களை ஆதரிப்பதாக எர்ஷாத் அறிவித்தார், மேலும் "எனது ஜஅவரதுஸ சகோதரி" பிரதமர் ஷேக் ஹசீனாவிற்கு தனது ஆதரவை வழங்கினார்.

அவாமி லீக் வேட்பாளருக்கு ஆதரவாக டாக்கா-17 தொகுதியில் போட்டியிடுவதில் இருந்து எர்ஷாத் தனிப்பட்ட முறையில் விலகினார். இருப்பினும் தனது கட்சியின் "வலுவான வேட்பாளர்கள்" போட்டியில் இருப்பார்கள் என்று எர்ஷாத் கூறினார்.

போக்ரா-6, போக்ரா-7 மற்றும் ஃபெனி-1 தொகுதிகளுக்கு கலிதா ஜியா வேட்புமனு தாக்கல் செய்தார். இரண்டு ஊழல் வழக்குகளில் தண்டனை பெற்றதால், மூன்று வேட்பு மனுக்களும் தேர்தல் ஆணையத்தால் நிராகரிக்கப்பட்டன. ஒரு கிரிமினல் குற்றத்திற்காக 2 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட எவரும் ஒரு பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட அனுமதிக்கப்படுவதற்கு முன் 5 ஆண்டுகள் கழிக்க அனுமதிக்க வேண்டும் என்று அரசியலமைப்பு கூறுகிறது. ஜியா ஒரு தொகுதியில் போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகளை முடிவுக்கு கொண்டு வர உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

வங்காளதேசத்தில் 30 டிசம்பர் 2018 அன்று 300 உறுப்பினர்களை பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் தலைமையிலான மகா கூட்டணிக்கு மற்றொரு மாபெரும் வெற்றி கிடைத்தது. கூட்டணி 90 சதவீதத்துக்கும் அதிகமான பாராளுமன்ற இடங்களைக் கைப்பற்றியது.

நாடு முழுவதும் உள்ள 40,199 வாக்குச் சாவடிகளில் இருந்து சுமார் 100 மில்லியன் வாக்காளர்கள் வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆறு தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன

தேர்தல்கள் வன்முறையால் சிதைக்கப்பட்டன, மேலும் எதிர்க் கட்சி அரசியல்வாதிகள் மற்றும் சர்வதேச சமூகம் தேர்தலில் மோசடி செய்யப்பட்டதாக பரவலாகக் கூறியது. அரசியல் விஞ்ஞானி அலிரியாஸின் கருத்துப்படி, தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறவில்லை. பிபிசி நியூஸ், மற்றவற்றுடன், அவாமி லீக்கின் சில வெளிப்படையான வாக்கு மோசடிகளைக் கவனித்தது என்றது. எதிர்க் கட்சித் தலைவர் கமல் குசைன் இந்த முடிவுகளை நிராகரித்தார், இது "கேலிக்கூத்து" என்றும், நடுநிலை அரசாங்கத்தின் கீழ் புதிய தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் கோரினார்.

தேர்தல் ஆணையம், "நாடு முழுவதிலும் இருந்து" புகார் அளிக்கப்பட்ட வாக்கு மோசடி குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் என்று கூறியது. பங்களாதேஷ் தேசியக் கட்சியின் (BNP) செய்தித் தொடர்பாளர் 300 இடங்களில் 221 இடங்களில் முறைகேடுகள் நடந்த தாகக் குற்றம் சாட்டினார்.

வாக்குப்பதிவு தொடங்குவதற்கு சற்று முன்பு, துறைமுக நகரமான சிட்டகாங்கில் உள்ள வாக்குச் சாவடியில் நிரப்பப்பட்ட வாக்குப் பெட்டிகளை பிபிசி நிருபர் ஒருவர் பார்த்தார் என்று சொல்லப்பட்டது. நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான அதிலும் பல வாக்குச் சாவடி மையங்களிலும் ஆளுங்கட்சி வாக்குச் சாவடி முகவர்கள் மட்டுமே இருந்தனர்.

மனித உரிமைகள் கங்காணிப்பகம் தெற்காசிய இயக்குநர் மீனாட்சி கங்குலி ட்விட்டரில், "வாக்காளர் மிரட்டல், எதிர்க்கட்சி வாக்குச் சாவடி முகவர்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் மறு வாக்குப்பதிவு கோரும் பல வேட்பாளர்கள் போன்ற கடுமையான குற்றச்சாட்டுகளால், தேர்தலின் நம்பகத்தன்மை குறித்து கவலைகள் உள்ளன" என்று கூறினார்.

பிரதான எதிர்க்கட்சி கூட்டணியில் இருந்து குறைந்தபட்சம் 47 வேட்பாளர்கள் வாக்குப்பதிவு முடிவதற்குள் மிரட்டல் விடுத்ததாகக் கூறி வாபஸ் பெற்றனர். ஆர்வலர்கள், பார்வையாளர்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் வாக்கு நியாயமாக நடக்காது என்று எச்சரித்திருந்தனர், ஆனால் ஆளும் கட்சி எதிர்க்கட்சிகள் தவறான கூற்றுக்களை பரப்புவதாக குற்றம் சாட்டியது. பிரதமரின் கட்சியைச் சேர்ந்த டசின் கணக்கான தொழிலாளர்கள் வாக்குச் சாவடிகளுக்கு வெளியே இருந்தனர், அதே சமயம் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் யாரும் தென்படவில்லை. இவ்வாறு பிபிசி தனது செய்தியில் தெரிவித் திருந்தது.

### 2024 பங்களாதேஷ் பொதுத் தேர்தல்

2018 பொதுத் தேர்தலில் அவாமி லீக் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தது. பாராளுமன்றத்தின் முதல் அமர்வு 30 ஜனவரி 2019 அன்று கூடியது. அரசியலமைப்பின் பிரகாரம் ஒரு பாராளுமன்றத்தின் பதவிக்காலம் வங்காளதேசத்தில் ஐந்தாண்டுகள் நீடிக்கும். இதன்படி தற்போதைய பாராளுமன்றம் 2024 ஜனவரி 29 அன்று காலாவதியாகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி (BNP), 2024 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் ஒரு நடுநிலையான காப்பந்து அரசாங்கத்திடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என்று கோரியது. இதை பிரதமர் ஷேக் ஹசீனா நிராகரித்திருந்தார், "வங்காளதேசம் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கத்தை அனுமதிக்காது" என்று சபதம் செய்தார்.

### காப்பந்து அரசாங்கத்தை நிராகரித்த காரணம்

2006 - 2008 நெருக்கடியைத் தொடர்ந்து ஒரு காப்பந்து அரசாங்கம் நாட்டின் இராணுவக் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டது. அக் காப்பந்து அரசாங்கம் ஹசீனா மற்றும் BNP தலைவர் கலிதா ஜியா உட்பட பல அரசியல் தலைவர்களை கைது செய்தது. ஜியா அனாதை இல்ல ஊழல் வழக்கில் ஈடுபட்டதற்காக பெப்ரவரி 8, 2018 அன்று ஜியாவுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் தண்டனை 10 ஆண்டுகளாக மாற்றப்பட்டது. கட்சியின் தலைவரான கலிதா ஜியாவின் வாரிசு, அவரது மகன் தாரிக் ரஹ்மான், கிரிமினல் சதி மற்றும் 2004 இல் ஹசீனாவைக் காயப்படுத்திய மற்றும் 24 பேரைக் கொன்ற கையெறி குண்டுத் தாக்குதலுக்காக பல கொலைக் குற்றச் சாட்டுக்களில் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார். அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதனால், அவர் பதவிக்கு போட்டியிட தடை விதிக்கப்பட்டது.

### வங்காளதேச தேர்தல் ஆணையம்

தேர்தல் சட்டம் மற்றும் அரசியலமைப்பின்படி தேர்தல் நடத்தப்படும் என்று உத்தரவாதம் அளிக்கும் வகையில், 2024 வங்காளதேச தேர்தல் ஆணையம் 27 பெப்ரவரி 2022 அன்று உருவாக்கப்பட்டது.

தேர்தல் அட்டவணையை அறிவிப்பது, தொகுதி மண்டலங்களை கோடிட்டுக் காட்டுவது, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தேர்தல்களை மேற்பார்வை செய்தல், தேர்தல் முடிவுகளை அறிவிப்பது மற்றும் தேர்தல் சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு தேர்தல் வாரியங்களை நிறுவுதல் ஆகியவை இதன் பொறுப்பாகவிருந்தது.

### தேர்தலுக்கு முன் வன்முறை போராட்டங்கள்

தேர்தலுக்கு முன், பங்களாதேஷில் பல மாதங்களாக வன்முறை போராட்டங்கள் நடந்தன. ஷேக் ஹசீனா பதவியில் இருந்து விலக வேண்டும், அரசாங்கத்தை கலைத்து, காப்பந்து அரசாங்கத்திடம் ஆட்சியை ஒப்படைத்து, அந்த காப்பந்து அரசாங்கத்தின் கீழ் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று அது கோரியது. ஆனால், ஷேக் ஹசீனாவுக்கு அது பிடிக்கவில்லை. எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உட்பட 10,000 இற்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

### தேர்தல் நடவடிக்கை

12 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 2024.01.07 ஆம் திகதி நடைபெற்றது. தேர்தல் காலை 8 மணிக்குத் தொடங்கி மாலை 4 மணி வரை நடைபெற்றது. மொத்தமுள்ள 350 பாராளுமன்றத் தொகுதிகளில், 50 தொகுதிகளுக்கு அரசால் பெண்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதால் மீதமுள்ள 300 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற இருந்தது. சுயேட்சை வேட்பாளர் மரணமடைந்ததால் 299 தொகுதிகளில் மட்டும் வாக்குப்பதிவுகள் நடைபெற்றது. மற்றைய தொகுதிக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த தேர்தல், ஆளும் அவாமி லீக் கட்சிக்கும், எதிர்க்கட்சியான ஜாத்தியா கட்சிக்கும் இடையேயான போட்டியாகப் பார்க்கப்பட்டது. ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் சார்பில் 266 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். 34 தொகுதிகளை இக்கட்சி கூட்டணி கட்சியினருக்கு ஒதுக்கி இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்து...

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தெருக்கள், பாலங்கள், மதகுகள் மற்றும் தொடருந்து பாதைகள் உட்பட பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்கான வசதிகளை வழங்குவதற்காக இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 10 பில்லியன்...

தல் செலவினங்களுக்காக தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதியை விடுவிக்க இயலுமென நிதியமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## 30 ஆயிரத்தை...

நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 57 ஆகும்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அது 6 ஆயிரத்து 910 ஆகும்.

அதேநேரம் 2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், மேல் மாகாணத்தில் 11 ஆயிரத்து 661 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## ஜனாதிபதித் தேர்...

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின் பிரதி அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சட்டத்தரணி அருண லக்சிறி தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனு மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரியும் 19 ஆவது திருத்தத்தை முறையாக நிறைவேற்றுவதற்கு பொது வாக்கெடுப்பு நடத்துமாறும் கோரியும் சட்டத்தரணி அருண லக்சிறி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். (ம-7)

## அரசாங்கம்...

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தேர்தலை பிற்போடுவதற்கு வரலாற்றில் எந்தவொரு கட்டத்திலும் இவ்வாறான சூழ்ச்சிகள் இடம்பெற்றதில்லை.

தேர்தலைப் பிற்போடுவதற்கு தற்போதைய ஜனாதிபதி பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

தேர்தலை நடத்துவதற்கு தயாராக உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 3 தினங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரம் கிடைக்கப் பெறுகின்றது. மக்கள் ஆணையில்லாத ஒரு அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் நீடிக்க முடியாது.

தேர்தலை நடத்த முடியாது என எந்த நீதிமன்றத்தினாலும் தீர்ப்பு வழங்கப்படமாட்டாது. அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமையை முடக்கும் செயற்பாட்டினையே முன்னெடுத்து வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## ஜனாதிபதித் தேர்தல்...

விப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெறுகிறது.

அதேபோன்று அரசியலமைப்புக்கு அமைய ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வுகளும் நிறைவடைந்திருக்க வேண்டும்.

அத்தோடு ஒக்ரோபர் மாதத்தில் நாட்டில் இயற்கை அனர்த்தம் அல்லது ஏதேனும் திடீர் அனர்த்தங்கள் ஏற்பட்டால் மாத்திரம் ஒரு வாரத்துக்கு தேர்தலை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உண்டு. அவ்வாறில்லையெனில் ஒக்ரோபர் 12ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## பிரபாகரனின்...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனது அவதானிப்புக்களைப் பகிர்ந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அன்றைய தினம் மாலையில் ஜனாதிபதி செயலகத்தில் கூட்டமொன்றை நடத்தினார்.

அந்தக் கூட்டத்தில் நாடு பொருளாதார ரீதியில் மீண்டெழுந்த பின்னரே தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான சூழல்கள் ஏற்படும் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால் நாட்டின் அரசியலமைப்பில் பொருளாதாரத்தினை மீட்டதன் பின்னர்தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தினை காரணம் காண்பித்து தன்னுடைய அரசியல் அதிகாரத்தினை வலுப்படுத்திக் கொள்வதற்கு முனைந்து வந்தார்.

தற்போதும், ஜனாதிபதியின் பதவிக் காலத்தினை மையப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை தாமதப்படுத்துவதற்கு முயற்சிகளை எடுத்திருந்தார். முன்னதாக தன்னுடைய கட்சியின் செயலாளரைப் பயன்படுத்தி காய்களை நகர்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தின் ஊடாகவும் முயற்சிகள் நடத்தப்பட்டன. ஆனால், இப்போது நீதித்துறையும் சட்டவாக்கத் துறையும் (எதிர்க்கட்சிகள்) மிகவும் உறுதியாக இருப்பதன் காரணத்தினால் அவருக்கு அடுத்தகட்டம் சிந்திப்பதற்கு இக்கட்டான தொரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அதாவது, கிளிநொச்சி வீழ்ச்சியின் பின்னர் எவ்வாறு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அடுத்த கட்டம் சிந்திப்பதற்கு அவகாசம் இருக்கவிலலையோ அதேபோன்று தான் இப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வால் தேர்தலை ஒத்திவைப்பது குறித்து நகர்வுகளைச் செய்வதற்கு சிந்திப்பதற்கான கால அவகாசம் போதாதுள்ளது. அதேநேரம், ஜனாதிபதி ரணில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குக் காரணம், தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் கொண்டிருக்கின்ற நம்பிக்கையீனமும் கள யதார்த்தமுமே ஆகும்.

சஜித்துக்கும் அநுரவுக்கும் இடையிலான போட்டிதான் இம்முறை தேர்தலில் காணப்படப் போகிறது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித், அநுர ஆகியோருக்கும் இடையில் பரம்பரை ரீதியாக இடைவெளியும் செல்வாக்குச் செலுத்துகிறது. ஆகவே அவரின் நகர்வுகள் அடுத்தகட்டமாக நேர்மறையான விளைவுகளைத் தரப் போவதில்லை என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் 5534 — X 5 7 6 5 2 8
அத சம்பத — X 6 5 2 8 — சீட்டிழுப்பு இலக்கம் 109
தேசிய லொத்தர் சபை — National Lotteries Board

தன நிதானய — திகதி 2024.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் 1564 — Y 16 28 29 38 Y — Double Chance 77637

மெகா பவர் — திகதி 14/07/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1882 — Z 26 29 32 34 66 — Double Chance 43659

லக்கி 7 VIP — திகதி 2024.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் 360 — V 3 4 2 6 5 9 V

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3776 — சீட்டிழுப்பு திகதி 14.07.2024 — B 13 22 36 79 — B 19383

ஹந்தஹன (HANDAHANA) — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0843 — விருச்சிகம் 07 21 47 55 விருச்சிகம் — 13583 — 27

சுப்பர் டின சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 14.07.2024 — வெற்றி வாரம் 242 — N — 9 2 5 9 2 2 — 57234 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,598,508.00 — DLB அபிவிருத்தி லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2508 — வர்ணம் ஆரஞ்சு நிறம் — சீட்டிழுப்பு திகதி 14.07.2024 — தினம் ஞாயிறு — 08 28 63 74 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,783,604.00

சனிதா — திகதி 2024.07.14 — வெற்றி வாரம் 4669 — 04 33 35 74 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,133,367.60 — 52059

சசிரி (SASIRI) — 502 — 2024.07.14 — கபிலம் — வெற்றி இலக்கங்கள் 01 36 45 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,497,280/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4220 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2024.07.14 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 04 07 15 29 மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,034,090.00 — 479106

கப்ருக — I 16 34 45 53 73 — 1684 — மஞ்சள் — 14.07.2024 ஞாயிறு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 533,119,203.40

அட கோட்டிபதி (ADA KOTIPATHI) — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2334 — சீட்டிழுப்பு திகதி 2024.07.14 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,487,243.20 — 02 30 42 51 Q — 776396


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளராக வியாபாரியை அறிவிப்பது பிறிதொரு விளைவின் ஆரம்பம்

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

எவருக்கும் பயமில்லை, கடனில்லை என்று அரசியல் மேடைகளில் குறிப்பிடுபவர்கள் 2022 ஆம் ஆண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கூட செல்ல முடியாமல் நாட்டை விட்டு தப்பிச் சென்றதை மறந்து விட்டார்கள். தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட வியாபாரியை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க முயற்சிப்பது பிறிதொரு விளைவுக்கான ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பதுளை நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புதிய கூட்டணியின் மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

தவறான அரசியல் தீர்மானங்களினால் பலவீனமடைந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் உயிர் பெற்றுள்ளது. பாரம்பரியமான சுதந்திரக் கட்சியின் மீது பெரும்பாலான மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஆகவே இந்த புதிய கூட்டணியின் இரண்டாவது மாநாட்டின் ஊடாக சகல சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். அனைவரும் புதிய கூட்டணியில் ஒன்றிணைய வேண்டும்.

அரசியல் நெருக்கடிகளினால் நாட்டில் மீண்டும் உறுதியற்ற அரசாங்கம் தோற்றம் பெறக் கூடாது என்பதை கருத்திற் கொண்டு சிரேஷ்ட அரசியல் வாதிகளை உள்ளடக்கிய வகையில் பலமான அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். இன்னும் இரண்டு வாரங்களில் கூட்டணியை பலப்படுத்தி ஜனாதிபதித் தேர்தல் குறித்து எமது தீர்மானத்தை அறிவிப்போம்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு மீண்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படவுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறுகின்றன. இதுவே ஜனநாயகம். இதனை வரவேற்கிறேன். ஆனால் 2022 ஆம் ஆண்டு இவ்வாறான ஜனநாயக சூழல் நாட்டில் காணப்படவில்லை என்றார்.

(ம-7)

### தேர்தலுக்கு...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி முழு நாட்டிற்கும் நகைச் சுவைகளை முன்வைத்து வருகிறார். புண்ணியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியான ஒருவர், தேர்தலுக்கு பயந்து தேர்தலை நடத்தாமல் அதிகாரத்தில் இருந்து கொள்வதற்கு பல்வேறு உத்திகளை கையாண்டு வருகிறார். இவ்வாறான ஒருவரை நான் எனது வாழ்க்கையில் பார்த்ததில்லை. போடவேண்டிய ஒவ்வொரு முடிச்சுக்களையும் போடுகிறார். சிறப்புரிமைகளை வைத்து பயனடைய நினைக்கிறார்.

சலுகைகள், வரப்பிரசாதங்களை வழங்கி கட்சித் தலைவர்களை வளைத்துப் போடும் வேலையிலும் இறங்கியிருக்கிறார். கட்சித் தலைவர்களிடம் பிச்சையெடுத்து பிழைக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் வெட்கமற்ற, கீழ்த்தரமான, கேவலமான அரசியல் கலாசாரத்துக்கும், அவ்வாறான அரசியலை முன்னெடுப்பவர்களையும் நிறுத்துகின்ற, இந்த பேராசை அரசியலையும் முடிவுக்குக் கொண்டு வரும் காலம் நெருங்கி விட்டது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியும் அரசாங்கத் தரப்பினரும் தேர்தலைக் கண்டு அச்சமடைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி பூச்சியத்துக்கு வீழ்ந்ததுடன், புண்ணியத்தால் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதற்குக் கூட பல மாதங்கள் பிடித்தன. மூலோபாய ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் இருப்பை பாதுகாக்கும் விதமாகவே இவ்வளவு காலமும் செயல்பட்டு வந்துள்ளனர். இத்தகைய சுயநல போக்குகளை விடுத்து, மக்களின் யுகத்தை உருவாக்கி, சாதாரண மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் அரசாங்கமொன்றே தற்போது நாட்டுக்கு அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

(ம-7)


### தேவார...

கட்டளையின் அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

(ம)

## மரண அறிவித்தல்

| உருவாய் | அருவாய் |
|---|---|
| 1947 - 04 - 02 | 2024 - 07 - 13 |



### திருமதி இராஜேஸ்வரி செல்வரட்ணம்

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி செல்வரட்ணம் அவர்கள் கடந்த சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கோப்பாய் தெற்கு கும்பப்பிள்ளையைச் சேர்ந்த செல்லையா - வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் செல்வமுரளி, ரஜனி (கலாசார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம்-சண்டிலிப்பாய்), செல்வமோகன் (பொறியியலாளர் அமெரிக்கா), செல்வஜிந்தன் (அலுவலகப் பொறுப்பாளர், போதனாசிரியர் - தொழிற்பயிற்சி அதிகார சபை,சம்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளாயினி, மேஜர்.நா.நரேந்திரா (அலுவலகப் பொறுப்பாளர்- தேசிய இளைஞர் படையணி-முல்லைத்தீவு, ஆசிரியர் - யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி), டனிஷா, ஷஜீவினி ஆகியோரின் மாமியாரும் செந்துஜி, பிரவீனா, பிருந்தாபன், பிரதீபன், பிரசாந்தினி, பிரசாந்தன், செந்துஜன், செந்தீபன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (16.07.2024) அன்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"இராஜேஸ் பவனம்"
பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம். (1481)

தகவல் :
குடும்பத்தினர்
076 [illegible]

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0796) 076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு: (157)
074 17 37 684

மணமகள் தேவை
யாழ்.கொடிகாமம் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1994 ஆம் ஆண்டு பூரட்டாதி 3 ஆம் பாதம் ஏழுச்செவ்வாய் பாவம் 60, தனியார் வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (1462)
021 205 0174

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0795)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்
சகல நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 1300/= French - 1990/=
Canada - 2400/= Germany - 1990/=
Australia - 2300/= USA - 2400/=
மற்ற நாடுகளுக்கும் விசேட சலுகை (1477)
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna. | 208, Galle Road, colombo-6.
077 755 4528

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0795)
College Of International Migration Skills
077 [illegible] / 077 7719 322

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0795)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபன[illegible] இல.19, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் [illegible]ம் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.